விலை ரூபா 2-00 ★ 8 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 வைகாசி 27 ரம்ழான் 19 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (9—6—85) இதழ் 119

## ஆசிரியர் இடமாற்றங்கள் இனி டிசம்பரில் தான்!

(யாழ்ப்பாணம்)

சகல ஆசிரியர்களுக்கான இடமாற்றங்களும் ரத்துசெய்யப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா இதற்கான உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளார்.

ஆசிரியர்களின் இடமாற்றம் இனிமேல் டிசம்பர் மாதத்தில் நடைபெறவேண்டும் என்று கல்விச்சேவை ஆணைக்குழுவுக்கு, கல்வி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். (மா)

### ● கொழும்பிலிருந்து நேற்று யாழ். வந்துகொண்டிருந்த

# 85 பிரயாணிகள் மீது தாக்கு!

# பொருள்கள் சூறை!

## 2 தனியார் பஸ்களை மறித்து குருநாகலையில் சம்பவம்

(கொழும்பு)

**கொழும்பிலிருந்து நேற்றுக்காலை யாழ்ப்பாணம் புறப்பட்ட இரு தனியார் பஸ்களில் வந்த பிரயாணிகள் குருநாகலைக்கு அண்மையில் ஒரு கோஷ்டியினரால் பயங்கர ஆயுதங்களால் தாக்கப்பட்டனர். உடைமைகள் சூறையாடப்பட்டன தெய்வாதீனமாக அத்தனை பிரயாணிகளும் பொலிசாரினால் காப்பாற்றப்பட்டனர்.**

கொழும்பிலிருந்து நேற்றுக் காலை 5-30 மணிக்கு யாழ்ப்பாணம் புறப்பட்ட இந்த இரு தனியார் பஸ்களும் குருநாகலுக்கு அண்மையில் கொக்கலெல்ல என்ற கிராமத்தைச் சுமார் 8 மணிக்கு வந்தடைந்த போது லொறி ஒன்றுடன் சிறு விபத்தில் சிக்கியதாகவும் இதனையடுத்து கத்தி கோடரி முதலான பயங்கர ஆயுதங்களுடன் அங்கு கூடியவர்கள் குறித்த பஸ்ஸை மறித்துப் பிரயாணிகளைக் கொடூரமாகத் தாக்கி, அவர்களின் உடைமைகளும் சூறையாடப்பட்டதுடன் தொடர்ந்து பின்னால் வந்துகொண்டிருந்த மற்றொரு தனியார் பஸ்ஸும் மறிக்கப்பட்டுப் பிரயாணிகள் தாக்கப்பட்டனர். உடைமைகள் அபகரிக்கப்பட்டன. பெண்கள் உட்பட முறையே 45 பேரும் 40 பேருமாக மொத்தம் 85 பிரயாணிகள்

(8-ம் பக்கம் பார்க்க)

### ஆயுதக் கொள்வனவு:

## கொழும்பிலுள்ள தமிழ் வர்த்தகர் கைது

[கொழும்பு]

தமிழ்த் தீவிரவாதிகளுக்காகச் சர்வதேச ரீதியில் ஆயுதக் கொள்வனவு செய்துவந்த குழு வொன்றை இரகசியப் பொலிஸார் கண்டு பிடித்துள்ளதாக அரசுவிடுத்த அறிக்கையொன்றில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாகக் கொழும்பிலுள்ள தமிழ் வர்த்தகப்பிரமுகர் ஒருவர் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளாராம்.

கொழும்பிலுள்ள மேலும் பல தமிழ் வர்த்தகர்களுக்கும் இந்தச் சர்வதேச ரீதியிலான ஆயுதக் கொள்வனவில் தொடர்பு இருப்பதாகவும்

[8ம் பக்கம் பார்க்க]

## 'புலி'கள் பெயரில்....

[கொழும்பு]

கெக்கிராவையில் ''நாங்கள் புலிகள்'' என்று கூறி ஐந்து நபர்களைக்கொண்ட கோஷ்டியொன்று கொள்ளையில் ஈடுபட்டதாம்.

இக்கொள்ளையர்களைப் பொலிஸார் மடக்கிப்பிடித்தனர். இக் கொள்ளையர்

[8-ம் பக்கம் பார்க்க]

## அமெரிக்காவின் புதுமையான மின் சாதனை!

(வாஷிங்டன்)

ஒருவர் அறைக்குள் நுழைந்தவுடன் சுவிட்ச் போடாமலே மின்சாரம் எரிகின்றது. வெளியில் வந்ததும் அணைந்து விடுகிறது. இப்படி ஒரு புதுமையானமின் சாதனையை அமெரிக்காவில் இப்போது அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்.

மனித உடலின் உஷ்ணத்தைக் கொண்டு இந்த மின்சார விசை இயங்க ஆரம்பிக்கிறதாம் எலக்ரோனிக் முறையில் செயல்படும் இந்த விசை மனிதன் அறையில் நுழைந்ததும் செயல்ப் படுகிறது. மனிதன் வெளியேறியதும் அணைந்து விடுகிறது.

### பாரிஸில் பாரத விழா:

## மித்தரோனும் ரஜீவும் தொடக்கி வைத்தனர்

(பாரிஸ்)

பாரிஸில் நேற்று முன்தினமிரவு ஆயிரக்கணக்கான மக்கள் பாரததிருவிழாவின் தொடக்க நிகழ்ச்சியைக்கண்டு களித்தார்கள்

இந்த எழில்மிகு விழாவைப் பாரதப்பிரதமர் திரு. ரஜீவ் காந்தியும் பிரஞ்சு அதிபர் மித்தரோனும் கூட்டாகத் தொடக்கிவைத்தார்கள்.

பிரஞ்சு அதிபருக்கு யானைக் குட்டி ஒன்றைப் பாரதப் பிரதமர் அன்பளிப்புச்செய்தார்.

இவ்விழாவில்பேசிய பாரதப் பிரதமர், இந்த விழாவினை நிர்மாணித்து நடத்துவதற்கு திருமதி இந்திராகாந்தி எடுத்த அக்கறையையும் ஆர்வத்தையும் நினைவுகூர்ந்தார்.

திருமதி இந்திராகாந்திதமது இதயத்தில் பிரெஞ்சு நாட்டுக்குத் தனியான சிறப்பிடம் ஒன்றை தந்திருந்தார் என்று பாரதப் பிரதமர் கூறினர்.

## சங்கக் கிளையில் கொள்ளை

[நெடுந்தீவு]

புங்குடுதீவு ப நோ. கூ. சங்கத்தின் முதலாவது கிளையான ஊரதீவுக் கிளையில் கடந்த புதன் இரவு கதவை உடைத்து இனம் தெரியாதவர்களினால், 6 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

உணவு முத்திரைக்கு பங்கீட்டுப் பொருள்கள் வழங்கப்படும் நெருக்கடியான நேரத்தில் இக் கொள்ளை நிகழ்ந்ததால் வறிய மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

## ஆறு வாரங்களில் இனப்பிரச்னைக்கு தீர்வு?

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னை இன்னும் ஐந்து அல்லது ஆறு வாரங்களில தீர்த்துவைக்கப் படவிருப்பதாக அரசு வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது. இதற்கான நடவடிக்கைகள் துரிதகதியில் முடுக்கி விடப்பட்டுள்ளனவாம்.

ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனவுக்கும் இந்தியப்பிரதமர் ரஜீவ்காந்திக்குமிடையே புதுடில்லியில் நடைபெற்ற உச்சிமகாநாட்டின் பின்னர் இனப்பிரச்னைத் தீர்வுக்கான நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் நிர்வாகத்துறையில் அதிக அதிகாரம் அல்லது தங்களைத்தாங்களே நிர்வகிக்க அல்லது ஆட்சிசெய்யக்கூடிய விதத்தில் திட்டம் தயாரிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

[8ம் பக்கம் பார்க்க]

## ம. கிழக்கிலுள்ள இலங்கையர் விபரம் திரட்டப்படும்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை செய்யும் இலங்கையர் பற்றிய விபரங்கள் திரட்டும் பொருட்டு தொழில் அமைச்சில் தகவல் வங்கி ஒன்று புதிதாக அமைக்கப்படவுள்ளது

மத்திய கிழக்கில் வேலை புரிவோரின் சம்பளம், வேலை விபரம் மற்றும் தனிப்பட்ட விபரங்களை இவ்வங்கி சேகரிக்கும்.

## உண்ணாவிரதம் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்க ஊழியர்கள் நாளை திங்கட்கிழமை நடத்த இருந்த உண்ணா விரதத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளனர்.

இதுபற்றி மேலும் ஆலோசிக்கப்பட்டு முடிவு மேற்கொள்ளப்பட விருப்பதாகத் தெரியவருகிறது.

### இலங்கை இனப்பிரச்னை:

## தீர்வுக்கான அணுகுமுறை காலம் கடக்கவில்லை

### பாரிஸில் ரஜீவ் கருத்து

(புதுடில்லி)

''இலங்கையில் நடைபெற்று வரும் அசம்பாவிதங்களைத் தடுத்து, தமிழர் பிரச்னைக்கு இணக்கமான அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன'' என்று இந்தியப் பிரதமர் திரு ரஜீவ் காந்தி நேற்றுப் பாரிஸ் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இம்மாதிரியான அணுகுமுறையொன்றை எடுப்பதற்குக் காலம் கடந்துவிடவில்லையா? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் ''தாம் அவ்வாறு கருதவில்லை'' என்று கூறினர்.

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவுக்கும் தமக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் குறித்தும் திரு. ரஜீவ் அங்கு நினைவு கூர்ந்தார். (து)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

யூனிபோ - UNIFO - ஒரு முறை பாவித்த மிக நல்லநிலையில் பாவனைக்குரிய ''H'' கேர்டர் 8''x4'', 12''x5'', 10''x5'' மற்றும் ''L'' இரும்பு 3''x2'', 2''x2'' மற்றும் M.S உருண்டைக் கம்பிகள் ½'' தொடக்கம் 1'' வரை விற்பனைக்கு உண்டு. பார்வையிட்டு விலைகளைக் குறிக்கவும் தொடர்பு: யூனிபோ, 57, விக்டோரியாவீதி, யாழ்ப்பாணம். அல்லது யூனிபோ, பலாலி வீதி, உரும்பிராய். 3643

சங்கு வேலியில், வீடு, கிணறு மற்றும் வசதிகளுடன் 6½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T. ஜெயராசா, அருளானந்தம் ஒழுங்கை, சங்குவேலி, மானிப்பாய். 3613

நிமிடத்துக்கு 60 கற்பூர வில்லைகள் தயாரிக்கும் புதிய தன்னியக்க கற்பூர மெஷின் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். செந்தூரன் தொழிற்சாலை, 'கோகுலம்', சுதுமலை வடக்கு, மானிப்பாய். 3685

நல்லூர் கந்தசாமி கோவில் சுற்றாடலில் காணிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Dr குஞ்சிதபாதம், வடக்கு வீதி, கந்தசாமி கோவில், நல்லூர். 3636

பயனியர் (Pioneer) ஸ்ரீயோ ரிசீவர் இரண்டு ஸ்பீக்கர்களுடன். அத்துடன் ''Sharp'' கசெற் டெக் விற்பனைக்கு. என் சண்முகநாதன், 465/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 3669

மலிவு விற்பனை- வின்ரர் கோட், சென் மைக்கல் சேட், ரீ சேட், மின்சார மின்னியல் உபகரணங்கள், சைக்கிள் (Gents) தொடர்பு- இல:01, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். 3683

மாவிட்டபுரம், மயிலிட்டி வீதி ஓரமாக பளை வீமன் காமம் ப. நோ. கூ. சங்கத்திற்கு அருகாமையில் வீடு, தொழிற்சாலை அமைக்கக்கூடிய 27 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் விற்கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: மூ. சிவசம்பு, அம்மன் வீதி, வீமன் காமம் வடக்கு, தெல்லிப்பழை. 3684

சகலவிதமான வீட்டுத் தளபாடங்கள் மின்சார உபகரணங்கள் உடன் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறில் பார்வையிடலாம். மகேந்திர வாசா, பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு 3692

குரும்பசிட்டியில் கல் நெரிக்கும் ஆலைக்கு அருகில் நிலப்பரப்பு 12 முழுமையாகவோ அல்லது அரைவாசியாகவோ விற்பனைக்குண்டு. தொடர்பு:- க. வே. மகாதேவன், சட்டத்தரணி, குரும்பசிட்டி. 3693

வீட்டுத் தளபாடங்கள், சைக்கிள், தட்டச்சு இயந்திரம். Electrical goods, Play pen, Walker etc உடன் விற்பனைக்குண்டு. 66, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 3701

கிளிநொச்சி 7ம் வாய்க்காலில் இரு போக நெற்காணி (10 ஏக்கர்) உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: க. யோகேந்திரன், C/O நாகேந்திரன், முருகமூர்த்தி கோவிலடி, நவாலி தெற்கு, மானிப்பாய். 3703

Morris Minor E Y 3897 புதிய 1000 Engine விற்பனைக்குண்டு தொடர்பு: 4?, கே கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ. பே. 23259. (3642)

## தேவை

Air Compressor 1¼'' out let valve இலிருந்து 100 P.S.I. அமுக்கமுள்ள காற்றைப் பெறக்கூடிய திறனுடைய எயர் கொம்பிறசர் ஒன்று உடனடியாகத் தேவைப்படுகிறது. மாரியம்மன் மோட்டர்ஸ், கோப்பாய் தெற்கு, கோப்பாய். 3663

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானத்திற்கு நித்தியபூசகராக ஒரு குருக்கள் உடன் தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும். தர்மகர்த்தா, ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானம், நுணுவில் மேற்கு, சாவகச்சேரி. (3696)

நல்ல நிலையிலுள்ள லேடீஸ் சயிக்கில் உடன் தேவை விபரம் அறிவிக்கவும்: சி வேலுப்பிள்ளை, பாக்கியவில்லா, கோவில் வீதி கிழக்கு, கொக்குவில். (3681)

3,4,5ம் வகுப்புக்குரிய ஆரம்ப விஞ்ஞான பாட நூல்கள் தயாரிப்பதற்கு இவ் வகுப்புக்களில் கற்பிக்கும் விஞ்ஞான அறிவுள்ள, தமிழில் எழுதும் திறமையுள்ள இரு ஆசிரியர்கள் தேவை. தகமையுடன் விண்ணப்பிக்கவும்: எஸ். பிரான்சிஸ், Y.M.C.A, யாழ்ப்பாணம். (3676)

ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள ஒரு பிரபல வியாபார ஸ்தாபனத்திற்கு இரும்பு வியாபாரத்தில் அனுபவமும் நம்பிக்கையும் வாய்ந்த முதலீடு செய்யக்கூடிய பங்காளர் தேவை. விபரங்கட்கு: விள. இல:3702, மே/ப. ஈழநாடு, யாழ்ப்பாணம். (3702

## FOR SALE

Sony Hifi System Tuner Amplifier, Player, Deck with Speakers with Imported cabinet NELCO sewing machine and other house-hold articles. Contact: 661, K.K.S. Road, Jaffna. 3699

## பயிற்சி

தையல்கலை, மனையியல்கலைப் பயிற்சி- திங்கள்-வெள்ளி வரை மாலை 1-30—4-15 வரை. Y'மென்ஸ் கிளப் ஆதரவில் நல்லூர் சென். யேம்ஸ் தேவாலய பண்டபத்தில் நடைபெறுகின்றன. ரூபா 20/- 4-15—5-15 பேச்சு ஆங்கிலம்; சனிக்கிழமைகளில் விசேட ஐசிங், கேக் டெக்கறேசன் வகுப்புகளும் நடைபெறுகின்றன. 3677

## தவறிவிட்டது

இல. 632911653 V மயில்வாகனம் அரியதாஸ் புங்குடுதீவு 6ம் வட்டாரம் என்பவருடைய அடையாள அட்டை யாழ்ப்பாணம் செம்மாதெருவுக்கும் மரக்கறி மார்க்கட்டுக்குமிடையில் 3-6-85ல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 3680

**WANTED MEDICAL OFFICERS**

''Resident Medical Officers with experience, Salary negotiable. Apply before30-6-85-President, Co-op Hospital Moolai, Chulipuram.''

3655

## மணப்பந்தல்

யாழ். இந்து உயர்குல 26 வயதுடையவரும் அரசாங்க திணைக்களமொன்றில் தொழில்நுட்பவியலாளர் (Technician) ஆக கடமையாற்றும் நல்லொழுக்கம் உடைய மணமகனுக்கு, அழகும் பண்பும், கல்வியறிவும், நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் உள்ள 24 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. குடும்ப விபரம், சீதன விபரம், ஜாதகக் குறிப்பு, அண்மையில் எடுத்த புகைப்படம் என்பவற்றை அனுப்பிவைக்கவும். விபரங்களுக்கு: விளம்பர இல:- 3674 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3674

யாழ். இந்து உயர்குல 31 வயதுடையவரும் பிரான்ஸ் நாட்டில் கௌரவமான தொழில்புரியும், நல்லொழுக்கம் உடைய மணமகனுக்கு அழகும், பண்பும், கல்வியறிவும், நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் உள்ள 26 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. (பிரான்ஸ் சென்று திருமணம் செய்யக்கூடியவராக இருத்தல்வேண்டும்) குடும்பவிபரம், சீதன விபரம், ஜாதகக் குறிப்பு, அண்மையில் எடுத்த புகைப்படம் என்பவற்றை அனுப்பிவைக்கவும். விபரங்களுக்கு: விளம்பர இலக்கம்: 3673 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3673

யாழ்ப்பாணம் இந்து உயர்குல வேளாள பெற்றோர் 32 வயது 4' 10'' உயரமுள்ள சிவப்பு நிற அரசாங்க சேவையிலுள்ள பயிற்றப்பட்ட கணித ஆசிரியை மகளுக்கு தகுந்த மணமகன் தேடுகிறார்கள். பட்டதாரி ஆசிரியர் விரும்பத்தக்கது. வீடு உட்பட தகுந்த சீதனம் கொடுக்கப்படும் அரசாங்க சேவையிலுள்ள 38 வயது பொறியியலாளர் சகோதரனுடன் மாற்றுத் திருமணமும் செய்யலாம் முழுவிபரங்களுடன் சாதகக்குறிப்பும் அனுப்பவும் விளம்பர இல: 3671. C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். [3671]

யாழ்ப்பாணம் இந்துஉயர்குல வேளாள பெற்றோர் அரசாங்க சேவையிலுள்ள 38 வயது 5' 5'' உயரமுள்ள பொறியிலாளர் (Charterd Civil Engineer) மகனுக்கு தகுந்த மணமகள் தேடுகிறார்கள் தொழில் புரிபவர் விரும்பத்தக்கது முழு விபரங்களுடன் சாதகக் குறிப்பும் அனுப்பவும் விளம்பர இல. 3670, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 3670

யாழ்ப்பாண இந்து வேளாள சமூகத்தை சேர்ந்த தீய பழக்கங்கள் அற்ற, முழுமையான கல்வித்தகமை பெற்ற அக்கவுண்டனாக கடமையாற்றிய, விரைவில் வெளிநாடு செல்லவிருக்கும் மணமகனுக்கு, அழகும் குணமும், கல்வித்தகைமையும் (Preferred I C M.A.) 32 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை சீதனவிபரம், குடும்ப விபரம், குறிப்பு, புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். குறிப்பு, புகைப்படம் திருப்பி அனுப்பிவைக்கப்படும். விபரங்களுக்கு: விளம்பர இல:3656, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 3656

யாழ். இந்து உயர்வேளாள குலத்தைச் சேர்ந்த அரசாங்க தொழிலில் மாத வருமானம் 1700/- எடுக்கக்கூடிய 38 வயதுடைய பெண்ணுக்கு நற்குணமும், பண்புமுள்ள மணமகன் தேவை. செவ்வாய் தோஷமுள்ளவர்கள் விரும்பப்படுவார்கள். சீதனம் கொடுக்கப்படும். விபரங்களுக்கு;- விளம்பர இல: 3654, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 3654

## யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயம்

பழைய மாணவர் மன்றத்தின் ஆண்டுவிழா 07-07-85 ஞாயிறு காலை நடைபெற இருப்பதால் அங்கத்துவத்தைப் புதுப்பிப்போரும் புதிதாகச் சேரவிரும்புவோரும் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

1. பிரேரணைகள் இருப்பின் 30-06-85க்கு முன்னர் செயலாளருடன் எழுத்துமூலம் தொடர்பு கொள்ளவும்.
2. ஆயுட்கால அங்கத்தவர்கள் தங்கள் புகைப்படப் பிரதியொன்றை (அளவு 2'' X 2½'') 30-06-85க்கு முன்னர் செயலாளரிடம் கையளிக்கவும்.

அதிபர்.

வைத்தீஸ்வர வித்தியாலயம்,
06-05-85. 3682

இன்று குதூகல ஆரம்பம்

## குமரன் மினி சினிமா

ரஜனி, ஸ்ரீதேவி, தீபா, சுருளி (இரு வேடங்கள்) நடித்த

## 'ஜானி'

காலை 10-30 மட்டும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

BRUCE LEE in

## THE DRAGON ON FIRE

(DRAGON LEE)

பிற்பகல் 2-30, 4 15 காட்சிகள்

குமரன் மினி சினிமா
குமரன் டூரிஸ்ட் இன்
67, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
Phone: 23753.

3695

## QUICK TRAVELS

## குயிக் ட்றவல்ஸ், யாழ்ப்பாணம்.

யாழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்று கடந்த ஒன்பது ஆண்டுகளாக நற்சேவை ஆற்றிவரும் குயிக் ட்றவல்ஸ் ஸ்தாபனத்தார் வழங்கும் நல்லதோர் வாய்ப்பு!

★ அதிவிரைவான பேர்லின் டிக்கட்டுகள். எங்களிடம் டிக்கட் பெறுபவர்களுடன் யாழ்ப்பாணம் தொடக்கம் AEROFLAT விமானம் ஏறும்வரை எங்கள் பிரதிநிதி உடன் சென்று சகல ஒழுங்குகளையும் கவனிப்பார்

★ மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்புப் பெறுவது பற்றிய ஆலோசனைகளைப்பெற எங்களுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்.

★ பாஸ்போட், B ND, RENEWAL, ENDORSEMENT, E. C., INDIAN VISA, விமான டிக்கட்டுகள் போன்ற எல்லாத்தேவைகளுக்கும் எங்களை நாடுங்கள்.

★ தாமதமற்ற நம்பிக்கையான எங்கள் சேவை என்றும் உங்களுக்கே!

நன்றி.

| | |
|---|---|
| குயிக் ட்றவல்ஸ்<br>136, கஸ்தூரியார்வீதி,<br>யாழ்ப்பாணம். | ட்றேடெக்ஸ் ட்றவல்ஸ்<br>சிலிங்கோ மாளிகை,<br>முதல்மாடி,<br>கொழும்பு-1. |

முக்கிய குறிப்பு: எமது ஸ்தாபனத்திற்கு யாழ்ப்பாணத்தில் வேறெந்தக் கிளை ஸ்தாபனமும் இல்லை.

3686

ஈழநாடு
வாரமலர்
EELANADU VARA MALAR

# குஞ்சுப் பரந்தனில்

## 1500 ஆண்டுப் பழைமை வாய்ந்த

# முதுமக்கள் தாழி!

திராவிட நாகரிகத்தின் பழமையைப் பறை சாற்றும் புதை பொருள் ஒன்று கடந்த 31-05-85 ஆம் திகதி கிளிநொச்சியில் கண்டு பிடிக்கப்பட்டது. 1500-ஆண்டுகளுக்கு முற்பட்ட திராவிட மக்களது 'மயான பூமி' ஒன்றில் முதுமக்கள் தாழி(பானை) ஒன்றினைச் சூட்டுக் களத்தை வயலாக்கும் முயற்சியி லீடுபட்டிருந்த குஞ்சுப் பந்தனைச் சேர்ந்த கந்தையா நாதன் என்பவர் கண்டுபிடித்தார். அந்தச் செய்தியை அவர் கிளிநொச்சி அரசாங்கஅதிபர் திரு சண்முகராசா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்த போது, உடனடியாக அந்த இடத்திற்குச் சென்று பார்வையிடுமாறு எனக்குப் பணிக்கப்பட்டது.

பண்டைய திராவிடர் இறந்தவர்களைப் பெருந் தாழிகளி விட்டு அடக்கம் செய்தனர். அத்தகைய ஒரு தாழியே குஞ்சுப் பரந்தனில் காணப்பட வேண்டுமென நான் எண்ணினேன்.

### குஞ்சுப் பரந்தனில்

பரந்தன்-பூநகரி வீதியில், குஞ்சுப் பரந்தன் உப தபாற் கந்தோரிலிருந்து தெற்காக மூன்று மைல் தூரத்தில் 'டீ8' என்ற குடியேற்றப் பகுதியில் நடராசா என்பவரின் வயல் காணியில் இந்த முது மக்கள் தாழி கண்டுபிடிக்கப் பட்டது. வயல் நிலத்தின் ஒரு பகுதி மேட்டு நிலமாகக் காணப்பட்டதால், அதனை மட்டப் படுத்தி வயலாக்கும் முயற்சியில் ஈடுபட்ட போது நிலத்தினுள் புதை யுண்டிருந்த தாழி வெளிப்பட்டது இத் தாழியை முதன் முதல் கண்ட திரு. நாதன் என்னுடன் இடத்தைக் காட்ட வந்தார்.

### 4 அடி உயரம் 8 அடிச்சுற்று

"நான்கு அடி உயரமும் எட்டு அடிச் சுற்றுங் கொண்ட முழுமையான ஒரு பானை நிலத்தில் புதையுண்டு கிடக்கிறது. அப்பானையின் வாய், மூடி ஒன்றினல் மூடப்பட்டிருக்கிறது நான் அதனைத் திறந்து பார்த்தேன். எலும்பு அல்லது யானைத் தந்தம் போன்ற நீளமான ஒரு பொருள் அதனுள் கிடந்தது. அதனுள் கருமையான துகள்கள் கிடந்தன இரண்டு சிறு பானைகளும் அதனுள் கிடந்தன. எலும்பு அல்லது யானைத் தந்தத்தை நான் எடுத்து வைத்திருக்கின்றேன்" என நாதன் கூறினர்

### புதையல் தேடுவோர்

நான் அவ்விடத்திற்குச் சென்ற போது, அந்த முதுமக்கள் தாழி புதையல் தேடுவோரால் சிதைக்கப் பட்டிருந்தது. அத்தாழி காணப்பட்ட இடத்தைப் பார்த்தேன். நான்கு அடி ஆழம், அடியில் தாழியின் உடைக்கப்படாத காற் பங்கு தெரிந்தது. குழியைச்சுற்றி உடைந்த ஓடுகள் சிதறிக்கிடந்தன. அந்த ஓடுகளை ஒன்றும் விடாமல்குவித்து வைத்தோம். பெரியதாழி ஒன்றினதும், வேறு சிறு முட்டிகளினதும் ஓடுகள் அவை என்பது புரிந்தது. தாழியின் முழு வடிவத்தை வரலாற்று அறிஞர்கள் உருவாக்க அந்தச் சிதைந்த பகுதிகள் உதவும்.

## திராவிடநாகரிகத்தின் சான்று

## வன்னி வரலாற்றில் ஒரு

## திருப்பம்!

### அஸ்தி

உடைக்கப்படாத அடித் தளத்தாழியைக் கொண்டு நோக்குமிடத்து அத்தாழி 4-4½ அடி உயரமானது என்பதும் 8 அடி சுற்றுக்கொண்டது என்பதும் புலனாயிற்று. தாழியின் ஓட்டுத் தடிப்பு ஒரு அங்குலத்திற்கு மேல் இருந்தது. தாழி ஓட்டின் மத்தியில் ½ அங்குலம் தடிப்பான கருமையான மண்சேர்வையும், அதன் இருபக்கங்களிலும் பழுப்பு நிறக்களி மண் கலவையும் காணப்படுகின்றன. தாழியின் வெளிப்புறத்தில் வரிவரியாகக் கீறல்கள் அல்லது பதிவுகள் காணப்படுகின்றன. தாழிக்குள் காணப்பட்ட கருமையான துகள்களில் ஒரு சிறு பகுதியைச் சேகரித்துக்கொண்டோம். அது 'அஸ்தி' போன்றுள்ளது. அதற்குள் காணப்பட்ட எலும்பு போன்ற பொருளும் பொறுப்பெடுக்கப்

(8-ம் பக்கம் பார்க்க)

கந்தையா குணராசா எம். ஏ.
உதவி அரச அதிபர் (அபிவிருத்தி)
கிளிநொச்சி

# கற்றாரைக் கற்றாரே

## காமுறுவர்



'டெயிலிநியூஸ்' பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் எச். ஏ. ஜே. ஹுலுகல (கண்ணாடியுடன் இருப்பவர்) அவர்களுடன் அமரர்.

இந்தியாவின் இரண்டாவது ஜனாதிபதி சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் ஒருமுறை இலங்கையில் ஒரு சொற்பொழிவாற்றி சபையோரைத் திணற வைத்தார்.

பரவசப்பட்ட நிலையில் தலைமைவகித்த பல்கலைக் கழக உபவேந்தர் சேர் நிக்கலஸ் அத்திகல முன் வரிசையிலிருந்த ஒருவரைக் கைகாட்டி நன்றி கூறப்பணித்தார்.

அந்த நிகழ்ச்சியை இலங்கை வானெலியில் கேட்ட பலர் அடுத்தநாள் நன்றி கூறியவர் யாரென்று கோஷமெழுப்பினர். பிரதம பேச்சாளரும் பார்க்க நன்றிகூறல் மிகச்சிறந்ததெனப் பத்திரிகைகளில் கருத்துதெரிவித்தனர்.

அவர் யார்? சென்ற ஞாயிற்றுக்கிழமை லண்டன் மருத்துவமனை ஒன்றில் காலமான முன்னைநாள் இலங்கைப் பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர் ஈ. எவ். சி. லூடவைக் அவர்களே!

காலன்வருவதை அறிந்தே என்னவோ இப்பெரியாருக்கு சென்றவருடம் பல அறிஞர்கள் எழுதிய புகழ் மாலை ஒரு பெரும் நூலாக இவருக்கு அளிக்கப்பட்டது.

பேராசிரியர் லூடவைக் 'லின்' என்று அன்புடன் அழைக்கப்பட்டார்.

கொழும்பில் நாவின்ன என்ற இடத்தில் அக்கம்பக்கமாக வாழ்ந்த மூவர்; மறைந்த பேராசிரியர் 'லின்', பௌத்தஅறிஞர் ராகுல, புகழ்பெற்ற கணித விற்பன்னர் எஸ். தங்கராசா.

1936ம் ஆண்டு தாம் லண்டன் மற்றிக் பரீட்சையில் சித்தியடைந்ததற்கு காரணமான இரு நண்பர்கள்; லின், தங்கராசா தமக்கு ஆங்கிலமும் கணிதமும் கற்பித்தமை தாம் என்றும் மறக்கமுடியாதென தமது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார் அறிஞர் ராகுல.

அறிஞர் ராகுல எழுதிய 'பௌத்தரின் போதனை' என்ற சர்வதேச புகழ்பெற்ற நூலை எழுத ஊக்குவித்தவரும் உதவியவரும் தமது நண்பன் 'லின்' என்று உருக்கமாகக் குறிப்பிடுகிறார்.

நகைச்சுவை ததும்ப அவர் எழுதியது; நூலின் ஆங்கிலத்திறமைக்கு லின் உதவியதோடு லின் தம்பதிகள் நூலின் அட்டையை தயாரித்து உதவினர். 'இன்று அந்த நூல் உள்ளுடனிலும் பார்க்க மிக அழகான அட்டைக்காகவே உலகெங்கிலும் அதற்குகிராக்கிபெற்றிருக்கிறது' என்கிறார் நூலாசிரியர் ராகுல.

காலி றிச்மண்ட் கல்லூரி அதிபரின் மகன் 'லின்' இலங்கைப்பிரஜை. நாட்டில் பேரபிமானங்கொண்டவர், புலமைப் பரிசு பெற்று கேம்பிறிட்ஜ் சென்று ஆங்கிலேயரால் முடியாத சாதனையை இயற்றி ஷேக்ஸ்பியர் பரிசு பெற்று பல்லாண்டுகளாக இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் வெளியிலும், பலதுறைகளிலும் உழைத்த பெரியார்.

அரம்போலும் கூர்மையர்; நட்புக்கும் விருந்தோம்பலுக்கும் அவருக்கு வேறெவரும் நிகரில்லாதவர்; பலருக்குப் பயன்பட்ட பண்புடையாளர்.

எதிர்தாக்கும் அறிவினரென்பதால் பிறந்த பொன்னாட்டை விட்டு வேலைக்கு வெளியேற வேண்டியிருந்தது.

கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு.

# உலகில் மே தினக் கொண்டாட்டம் இல்லாதநாடு

– க. ஜீவகதாஸ் –

மே மாதம் முதலாம் திகதி உலகத் தொழிலாளர் தினம். இத்தினத்தினை உலகிலுள்ள சகல நாடுகளும், அரசாங்க விடுமுறையாகப் பிரகடனப்படுத்தி, தொழிலாளர்களின் உழைப்புக்கு மரியாதை அளித்து வருகின்றன.

தொழிலாளர்களுக்கு எட்டு மணித்தியாலம் வேலை நேரம் வேண்டும் எனக் கோரிக்கை விடுத்து முதல் போராட்டம் இடம்பெற்ற இடம் அமெரிக்காவிலுள்ள சிக்காக்கோ நகரம் என்பதை யாவரும் அறிவர்

ஆனால் உலகிலுள்ள நாடுகளிலெல்லாம் மே தினம் கொண்டாடப்பட்டவேளை அமெரிக்காவில் இத்தினம் கொண்டாடப்படவில்லை. மே தினத்தன்று இங்கு விடுமுறையும் கூட இல்லை.

ஆதலினால் அமெரிக்கா, தொழிலாளர்களை மதிக்கவில்லை. கௌரவிக்கவில்லை என்பது அர்த்தமல்ல. ஐக்கிய அமெரிக்காவில் இருக்கும் தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் மாதம் முதல் வருகின்ற திங்களன் தினத்தினை தொழிலாளர் தினமாக (Labour Day) பிரகடனப்படுத்தி அரச விடுமுறையாக்கியுள்ளனர்.

இத்தினத்தில் இங்கு தொழிலாளர்கள் யாவரும் குதூகலமாகத் தமது தினத்தினைக் கொண்டாடுவார்கள்.

இங்குள்ள தொழிலாளர்களுக்கு இந்த Labour Day தான் நல்ல ஞாபகத்திலுள்ளது போலவும் தெரிகின்றது.

# கண்ணீரில் மிதக்கின்றாள்

கண்ணீரில் மிதக்கின்றாள்
கடல் நடுவே கொடியோரால்
செந் நீரைக் கொட்டிய தன
சேய் களுக்காய் நெடுந்தீவாள்
மண் மீது அழுகை ஒலி
மரங்க ளெலாம் கருங் கொடிகள்
விண்ணிருந்து வானோர்கள்
வீழ்த்துகின்ற நீர்த்துளிகள்
புண்பட்ட வேலாகப்
பொங்குகின்ற துயரங்கள்
கண்பட்ட தம்மா எம்
களங்கமிலா மழலைகளில்

—நெடுந்தீவு லக்ஸ்மன்

# ஜப்பானில் ஒரு மாயாஜாலபுரி!

'விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்' என்ற தலைப்பில் தற்போது ஜப்பானில் மாபெரும் கண்காட்சி ஒன்று நடைபெற்றுவருகிறது.

ஜப்பானிலுள்ள டோக்கியோ நகரத்திலிருந்து ஐம்பது மைல் தொலைவிலுள்ளசுகூபா என்ற இடத்தில் இந்தவிந்தைமிகு கண்காட்சி கடந்த மார்ச் மாதம் திறந்து வைக்கப்பட்டது.

'எக்ஸ்போ 85' என்று பிரியமுடன் அழைக்கப்படும் இந்தக் கண்காட்சியைஎப்படியும் பார்த்தேயாகவேண்டும்என்றஉந்தலில் உலகின் பல்வேறு நாட்டு மக்களுக்கும் ஆர்வம்காட்டும் அளவுக்கு அந்தக்கண்காட்சி பிரபல்யம் அடைந்திருக்கிறது. எதிர்வரும் செப்டம்பர் மாதம் வரை இந்தக்கண்காட்சி நடைபெறும்.

## விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்

'விஞ்ஞானமும் தொழில் நுட்ப வளர்ச்சியும்', பார்ப்பவரைப் பிரமிக்க வைக்கும் விதத்தில் அங்கே ஒரு மாயாஜால உலகத்தையே சிருஷ்டித்திருக்கிறது!

இருபத்தோராம் நூற்றுண்டில் மனிதன் வசதியான வாழ்க்கை நடத்துவதற்கு அவனுக்கு விஞ்ஞானம் என்னென்ன வகையான சாதனங்களை யெல்லாம் வழங்கவிருக்கிறது என்பது பற்றியஅதிசய பொருள்களை உள்ளடக்கிய விஞ்ஞான சொர்க்கபுரியாக இந்தக்கண்காட்சிஉருப்பெற்றிருக்கிறது.

'சோனி' என்ற பெயரை நாம்கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஜப்பானைச் சேர்ந்த அந்த 'சோனி' நிறுவனத்தினர் ராட்சத தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றையே இந்தக் கண்காட்சியில் அமைத்திருக்கிறார்கள்.

கலையில் இனிமேல் மனித இயந்திரங்களும் பங்கு கொள்ள இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா...?

இந்தக் கண்காட்சியில் மனித உருவங்களை அழகான ஓவியங்களாக வரையக்கூடிய மனித இயந்திரங்களை ஒரு அதிசய காட்சிப் பொருளாக வைத்திருக்கிறார்கள். ஜப்பானைச் சேர்ந்த எலெக்ரோனிக் கம்பனி ஒன்று இந்த இயந்திரத்தைக் காட்சிக்கு வைத்திருக்கிறது இத்துடன் நடந்து திரியும் மனித இயந்திரங்கள், பேசித்திரியும் மனித யந்திரங்கள், உல்லாசமாகப்பாடித் திரியும்மனிதயந்திரங்கள் ஆகியவையும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## அந்தரத்தில் பறக்கும் ரயில்

தண்டவாளம் இருந்தும் தண்டவாளத்துக்கு மேலே அந்தரத்தில் பறக்கக்கூடிய ரயிலைப்பார்த்திருக்கிறீர்களா? இது என்ன விந்தை; இப்படியும் ஒரு ரயில் இருக்கிறதா என்று பலர் கேட்கலாம். ஆம், அந்தரத்தில் பறக்கும் அந்த அதிசய ரயில்இந்தக் கண்காட்சியில் இருக்கிறது. அங்கே போனால் அதைப்பார்க்கவும் முடியும்; அதில் ஏறிச்சொகுசாகப் பிரயாணம் செய்யவும் முடியும். ஜப்பான் எயர்லைன்ஸ் நிறுவனம் இந்த ரயிலைக்காட்சிக்கு வைத்திருக்கிறது. மின்காந்த சக்தியின்

சிலை அமைப்பதற்கு 2500 கோடி அமெரிக்க டொலர் செலவாகியிருக்கிறதா என்று உலக நாடுகள் வியப்படைந்திருக்கின்றன. 'உலக விஞ்ஞானக் கண்காட்சி' என்று இந்தக் கண்காட்சியை பிரான்ஸ் மனதாரப் பாராட்டியிருக்கிறது.

அமெரிக்கா ஒரு கோடியே 60 லட்சம் அமெரிக்க டொலர் செலவில் அதன் காட்சிக் கூடத்தை அங்கே நிர்மாணித்திருக்கிறது. அண்ட வெளியில் நிலைகொள்ள இருக்கும் விண்வெளி நிலையங்களின் மாதிரி வடிவங்கள் இந்தக் காட்சிக் கூடத்தில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. விஞ்ஞான தொழில் நுட்பத் துறையில் அசுர சாதனைகள்புரிந்து வரும் ஜப்பானியர்களை கண்டு வியக்கும் அளவுக்கு அமெரிக்காவின் காட்சிப் பொருள்கள் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன.

## ரஷ்ய காட்சிக் கூடம்

இந்தக் கண்காட்சியில் ரஷ்யாவே மிகப் பெரிய காட்சிக் கூடத்தை நிர்மாணித் திருக்கிறது ரஷ்யாவின் விண்வெளித் தொழில் நுட்பமுறைகளையும், மருத்துவ சாதனைகளையும் எடுத்துக் காட்டும் விதமாக இந்தக் கூடம் அங்கே சிறப்பு அம்சம் பெறுகிறது.

உலகின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த சுமார் இரண்டு கோடி மக்கள் இந்தக் கண்காட்சியை கண்டு களிப்பார்கள் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது இந்தக் கண்காட்சிக்கென விளம்பர ஏற்பாடுகள் மிகப் பெரிய அளவில் மேற்கொள்ளப் பட்டிருந்தன. கண்காட்சி ஆரம்பமாவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னரே இதுசம்பந்தமான விளம்பர ஏற்பாடுகள் மேற் கொள்

**ஓவியந் தீட்டும் மனித இயந்திரங்கள்**
**நடந்து திரியும் மனித இயந்திரங்கள்**
**பேசித்திரியும் மனித இயந்திரங்கள்**
**உல்லாசமாகப் பாடித்திரியும் மனித இயந்திரங்கள் – மணிக்கு**
**300 மைல் வேகத்தில் பறக்கும் ரயில்**

## 4 டென்னிஸ் மைதான அளவு ரி. வி. திரை

இந்தக் கண்காட்சியைப் பார்க்க வருவோர், அதிகமான வர்களைக் கவரும் ஓர் அம்சமாக இந்த தொலைக்காட்சிப் பெட்டி இருக்கிறது என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.

இந்தத் தொலைக்காட்சிப் பெட்டியில் திரை எவ்வளவு பெரிது தெரியுமா? நான்கு டென்னிஸ் பந்தய மைதானங்களின் அளவைக் கொண்டது அந்தத் திரை! இப்படியும்ஒரு அகலத்திரையா? அதுவும் தொலைக்காட்சிப் பெட்டியில்? மூக்கின் மேல் விரலை வைக்க வேண்டாம்.அது தான் சொன்னேனே ராட்சத தொலைக்காட்சிப் பெட்டி என்று இந்த அளவு பெரிய தொலைக்காட்சிப் பெட்டியை எப்படி வீட்டுக்குள் வைத்துக்கொள்வதென்று கண்காட்சியைப் பார்க்க வருவோர் மலைத்துப் போய் நிற்கிறார்கள்.

### மனித இயந்திரம்

'ரொபட்ஸ்' என்று அழைக்கப்படும் மனித இயந்திரங்களைப்பற்றி நாம் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறோம். ஒரு சில மாதங்களுக்கு முன் அந்த அதிசய மனிதர்களைப் பற்றிய கட்டுரை ஒன்றும் எமது பத்திரிகையில் வெளிவந்தது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். பொதுவாக மனித இயந்திரங்கள் என்னென்ன வேலைகளை எல்லாம் செய்யக்கூடிய ஆற்றல் படைத்தவை என்பதையும் நாம் ஓரளவுக்கு அறிந்து வைத்திருக்கிறோம். சித்திரக்கலை மனிதனுக்கே சொந்தமான ஒன்று. அந்தக்

மூலம் தண்டவாளத்துக்கு மேலே இந்த ரயில் ஒருவிமானத்தைப்போல் பறந்து செல்கிறது. அதன் வேகம் எவ்வளவு தெரியுமா? மணிக்கு 300 மைல்! கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ரயிலில் வருவதற்கு பத்துமணித்தியாலத்துக்கு மேல் பிடிக்கிறது. நாம் இன்றும் மாட்டுவண்டி யுகத்திலா இருக்கிறோம் என்று அந்த இரயிலைப் பார்த்ததும் நினைக்கத் தோன்றும்!

இந்தக் கண்காட்சியில் ஜப்பான் மாத்திரம் கலந்து கொள்ளவில்லை. இலங்கை, அமெரிக்கா, ரஷ்யா உட்பட மொத்தம் 47 நாடுகளும் 37 சர்வதேச ஸ்தாபனங்களும்

ளப்பட்டன! வெளிநாடுகளிலிருந்து அதிகமான பார்வையாளர்களைக் கவரும் விதமாகவே இந்த விளம்பர உத்தி கையாளப்பட்டது. தொழில் நுட்பத் துறையில் ஜப்பான் அடைந்திருக்கும் விந்தைமிகு முன்னேற்றத்தை உலக மக்கள் கண்டுகளிக்க வேண்டும் என்பதில் ஒவ்வொரு ஜப்பானியரும் இன்று கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். அவர்கள் பெருமை சொல்வதற்கு இந்தக் கண்காட்சி அவர்களுக்கு நல்ல களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது எனலாம்.

### 76 சத வீதமானவர்

இந்தக் கண்காட்சியைக் கண்டு களிப்பதற்கு எத்தனை

★ பெஞ்சமின் இராசரத்தினம்

மற்றும் 28 ஜப்பானிய கூட்டுத்தாபனங்களும் கலந்து கொள்கின்றன. விஞ்ஞான தொழில்நுட்பத்துறையில் உலகில் நான்காவது இடத்தைவகிக்கும் இந்தியா இந்தக் கண்காட்சியில் பங்கு கொள்ளாமல் போனது பலருக்கும் ஏமாற்றத்தைத் தருவதாகவே இருக்கிறது.

### 2,500 கோடி டொலர்

இந்த மாபெருங் கண்காட்

ஜப்பானியர் விஜயம்செய்வார்கள் என்பது பற்றிய புள்ளி விபர மதிப்பீடு ஒன்றும் மேற்கொள்ளப்பட்டது. இந்தமதிப்பீட்டின் படி 76 சதவீதமான ஜப்பானியர்கள் இந்தக் கண்காட்சியைப் பார்க்க விரும்புவதாக தெரிவித்திருந்தார்கள்.

இந்தக் கண்காட்சியை உலக நாட்டுத் தலைவர்கள் வசதியாகக் கண்டு களிப்பதற்கான

(6-ம் பக்கம் பார்க்க)

## நினைவில் நிறைந்த அரசியலார்சிலர்–13

# செல்வாவின் ஸ்ரீ எதிர்ப்பும் திருமலை யாத்திரையும்

### எஸ். எம். ஜி.

சிங்களம் மட்டும் மசோதாவை எதிர்த்துப் பாராளுமன்றப்படிகளில் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்யத் திட்டமிட்டிருப்பதாகத் தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் சபாநாயகருக்கும் பிரதம மந்திரிக்கும் கடித மூலம் அறிவித்திருந்தார். 1956-ஆம் ஆண்டு ஜூன் 5-ஆம் தேதி திட்டமிட்டபடி தமது கட்சித் தொண்டர்களுடனும் தமது கட்சியின் சக பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் திரு. செல்வநாயகம் பாராளுமன்றத்தை நோக்கிச் சத்தியாக்கிரகம் செய்ய வந்தபோது குண்டர்களால் இடையூறு செய்யப்பட்டதும் பாராளுமன்றத்துக்கு முன்பாகக் காலிமுகத்திடலில் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர். பின்னர் குண்டர்களின் கடும் தாக்குதல்களுக்கு அவர்கள் உள்ளானார்கள் இதைத்தொடர்ந்து கொழும்பு நகரில் அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களும் தமிழ் அரசாங்க ஊழியர்களும் தாக்குதலுக்குள்ளானார்கள். இந்நிலையில் நண்பகல் ஒரு மணியுடன் தந்தை செல்வா சத்தியாக்கிரகத்தை நிறுத்துவதற்கு முடிவுசெய்தார்.

### ஸ்ரீஎதிர்ப்புப்போராட்டம்

சிங்களம் மட்டும் மசோதா பாராளுமன்றத்தில் ஜூன் மாதம் ஐந்தாம் தேதி சமர்ப்பிக்கப்பட்டு ஜூன் மாதம் 14-ஆந் தேதி நிறைவேற்றப்பட்டது.

சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்துத் தமிழ்ப் பகுதிகளில் கடையடைப்பு, பகிஷ்கரிப்பு, ஹர்த்தால், எதிர்ப்புக்கூட்டங்கள் என்று பலத்த எதிர்ப்பு இயக்கத்தில் தமிழரசுக்கட்சியினர் ஈடுபட்டனர். இதில்இதர கட்சிகளும் ஒத்துழைத்தன. இந்தஎதிர்ப்பிலும் கூட தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக்கட்சிகளுக் கிடையில் போட்டி!

அரசாங்க விடுமுறை தினங்களில் கடையடைப்பும் ஹர்த்தாலும் நடத்துவதில் அர்த்தமில்லையென்றும் கடைதிறந்து வைத்துப் போராடுவது சட்டமறுப்பாகும் என்றும் தமிழ்க் காங்கிரஸ் கூறியது. கடையடைப்புச்செய்து ஹர்த்தால் நடத்துவதுதான் போராட்டம் என்றது தமிழரசுக்கட்சி. இப்படி சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்துத் தமிழரசுக்கட்சியும்,தமிழ்க் காங்கிரசும் கூட கடையடைப்பு கடைதிறப்புப்போராட்டமும் நடத்தின!



'சிங்களம் மட்டும் சட்டத்தைப் பாராளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் முழுமூச்சுடன் எதிர்ப்போம்' என்று கூறியபடி சிங்களம் மட்டும் மசோதா கொண்டுவரப்பட்ட அன்று காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் நடைபெற்றது. தமிழ்ப்பகுதிகளில் ஹர்த்தாலும் இடம்பெற்றது.

சிங்களம் மட்டும் மசோதா மீதான விவாதத்தில் கலந்து கொண்டு தந்தை செல்வா ஜூன் பதினைந்தாம் தேதி பேசினார் சுமார் ஒரு மணி நேரம் உரையாற்றிய அவர் 1948-ஆம் ஆண்டில் டி. எஸ். சேனநாயகா அரசினால் மலையகத் தமிழர்களின் வாக்குரிமை, குடியுரிமை பறிக்கப்படாமலிருந்திருந்தால் இன்று வடக்குக் கிழக்கைச் சேர்ந்த பதினறு பிரதிநிதிகளுடன் மலையகத் தமிழர் பிரதிநிதிகள் எண்மரும் பாராளுமன்றத்திலிருப்பார்களென்றும் இதனால் சிங்களம் மட்டும்மசோதாவை இன்று போல் மிகச் சுலபமாக நிறைவேற்றுவதற்கு அரசினால் முடியாதிருந்திருக்குமென்றும் திரு. செல்வநாயகம் எடுத்துக் கூறினார் 1948 ஆம் ஆண்டில் மலையகத்தமிழரின் குடியுரிமை, வாக்குரிமையைப் பறிப்பதற்குக் கொண்டுவரப்பட்ட மசோதாவைத்தாம் எதிர்த்து வாக்களித்ததற்கான காரணத்தையும் எடுத்துக்காட்டிய திரு செல்வநாயகம் இன்று சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்படுவது தமிழ் மக்களை இந்நாட்டில் ஒழித்துக் கட்டுவதற்கான இரண்டாவது கட்டமான செயல் என்றும் சுட்டிக்காட்டினார்.

திரு. செல்வநாயகம் தொடர்ந்துபோராட்டங்களை நடத்தி வந்தார். இதற்கு ஏற்றாற்போல் அரசாங்கம் மோட்டார் வாகனங்களில் இலக்கத் தகடுகளில் ஆங்கில எழுத்துக்குப்பதிலாக சிங்கள ஸ்ரீ எழுத்தைப் பொறிக்கத் தீர்மானித்தது!

திரு. செல்வநாயகமும் தமிழரசுக் கட்சியினரும் சிங்களஸ்ரீ எதிர்ப்பு இயக்கம் ஆரம்பித்தனர். இது தார்ப்பூச்சு இயக்கமாக உருவெடுத்தது. சிங்கள ஸ்ரீ எதிர்ப்புஇயக்கத்தில் ஈடுபட்டுத் தமிழரசுக் கட்சியினர் சிறைத் தண்டனை பெற்றனர். தந்தை செல்வா மட்டக்களப்பில் ஸ்ரீ அழிப்பில் ஈடுபட்டுச் சிறைத் தண்டனை பெற்று மட்டக்களப்பில் சிறைத்தண்டனையை அனுபவித்தார்.

### தமிழரசாரின் திருமலை யாத்திரை

சிங்களம் மட்டும் சட்டத்தையும் மற்றும் அரசின் சிங்களத் திணிப்பு நடவடிக்கையையும் எதிர்த்துப் பெரும் போராட்டம் நடத்த வேண்டுமென்றும் சிறைச்சாலைகளை நிரப்புவதென்றும் திரு செல்வநாயகம் தமிழ்ப் பகுதிகளில் பிரசாரம் செய்து வந்தார். இதன்படி தமிழரசுக் கட்சியின் மாநாட்டைக் கூட்டித் தீர்மானிப்பதென முடிவு செய்யப்பட்டது.

திருக்கோணமலையில் மாநாடு நடத்துவதென்றும் அந்த மாநாட்டுக்குத் தமிழ்ப் பகுதிகளிலிருந்து கால்நடையாக யாத்திரை செய்து பட்டிதொட்டிகளிலெல்லாம் தமிழ் மக்களைத் தயார் செய்வதென்றும் தீர்மானித்தனர் தந்தை செல்வா மட்டக்களப்பிலிருந்து தமது திருமலை யாத்திரையை ஆரம்பித்தார்.

(அடுத்த வாரம் முடியும்)

# 11

கந்தசாமி தன் குடும்பத்துடன் கெருடாவிலுக்கு வந்து குடியேறி ஒரு வருடத்திற்கு மேலாகி விட்டது. அவனும் அவன் குடும்பத்தவர்களும் அந்தப்பகுதி மக்களுக்கு அந்நியப்பட்ட நிலைமாறி அந்தக் கிராமத்தவர்களாகவே இந்தக் குறுகிய காலத்துக்குள் ஆகி விட்டார்கள்.

கந்தசாமிக்கு அவன் பிறந்த கிராமத்தில் வாழும் தன் இனத்தவர்களையோ அல்லது சிலகாலம் குடியிருந்த கரணவாய் மக்களையோ பார்க்கிலும் கெருடாவில் மக்கள் அவனுடைய மனத்தைப் பெரிதும் கவர்ந்தவர்களாக இருந்தார்கள் மண்ணோடு பிணைந்து வாழும் கூலித்தொழிலாளிகளான அவர்களிடையேகாணப் படும் ஐக்கியம் அவன் உள்ளத்தில் எதிர்காலம் பற்றிய உறுதியையும் நம்பிக்கையும் அளித்தன. அந்த நம்பிக்கை தான் பிறந்த மந்திகைக் கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களிடமும் உருவாக வேண்டுமே என்று அவன் உள்ளம் ஏங்கியது.

அவன் மந்திகையிலிருந்து சில கிலோ மீற்றர்களுக்கப் பால் கெருடாவிலில் வந்து இன்று வாழ்ந்து கொண்டிருக்கும்போதும் சகோதரி சின்னக்குஞ்சியையும பிள்ளைகளையும் வாரத்தில் ஒரு தடவையாவது சென்று பார்ப்பதற்குத் தவறுவதில்லை. ஆனால் சின்னக்குஞ்சியின் குடும்பத்துக்குத் தன்னாலியன்ற உதவிகளையெல்லாம் அவன் செய்ய முன்வந்த சமயங்களிலெல்லாம் அவள் அந்த உதவிகளை ஏற்றுக்கொள்ளாது மறுத்துத் தட்டிக்கழித்துக் கொண்டே வந்தாள். சின்னக்குஞ்சி அப்படி ஏன் தன்னோடு நடந்துகொள்ளுகின்றாள் என்பதும் அவனால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் அவளுக்குத் தன் மேலுள்ள ஏதோவொரு வெறுப்புக் காரணமாகவே, தான் செய்ய விரும்பும் உதவிகளை எல்லாம் அவள் தட்டிக் கழித்து வருகிறாள் என்று கொள்வதற்கும் அவனால் முடியவில்லை. சின்னக்குஞ்சி தான் பெற்ற பிள்ளைகளிலும் பார்க்க இன்றும் தன்மேல் அதிகபாசம் வைத்திருக்கிறாள் என்பதைச் சில சமயங்களில் அவன் அவதானித்து உள்ளம் நெகிழ்ந்து போயிருக்கிறான்.

அவளையும் அவள் குடும்பத்தையும் பட்டினியின்றி எப்படிப் பாதுகாப்பதென்பதே இன்று அவன் மனத்தை வருத்திக்கொண்டிருக்கும் ஒரே பிரச்சனை. அவர்களிலிருந்து விலகி அவன் வாழ்ந்து கொண்டிருக்கும் போதும் தினமும் அவன் உணவுக்கு முன்னே போய் அமர்ந்து கொண்டால் சின்னக்குஞ்சியின் குழந்தைகளின் முகங்களே அவன் நினைவுக்கு வரும்.

இன்று கந்தசாமி வேலை முடிந்து வீட்டுக்குத்திரும்பிய நேரம் முதல் ஏனோ அவர்களுடைய எண்ணமே அவன் மனத்தைப் போட்டு அரித்துக் கொண்டிருந்தது. தங்கம் அவனைச் சாப்பாட்டுக்கு அழைத்ததும் அவன் உணவுக்கு முன் வந்து குந்தினானே அன்றி அவனுக்கு உணவு உட்செல்லவில்லை.

"என்ன யோசிக்கிறியள் சாப்பிடாமல்?" - அவனை அவதானித்துக் கொண்டிருந்த தங்கம் இப்படிக்கேட்டாள்.

"இல்லை... அக்காவையும் பிள்ளையளையும் பற்றித்தான் இண்டைக்கு மனத்திலை ஒரே எண்ணமாகக் கிடக்கு" என்றான் அவன்.

அவன் தான் சாப்பிட்டதாக அவளுக்குப் பேர்பண்ணிவிட்டு கையை அலம்பிக்கொண்டு அவசரமாக எழுந்து போய் விட்டான்.

அவன் மனம் தொடர்ந்து அலட்டிக்கொண்டிருப்பதிலும் பார்க்க ஒரு தடவை மந்திகைக்குப் போய் வருவோமென்று உள்ளூர நினைத்துக் கொண்டிருந்த போதுதான் சின்னக்குஞ்சியின் கணவன் இராசன் திடீரென்று இறந்து போன அந்த மரணச்செய்தி அங்கு வந்து சேர்ந்தது.

கந்தசாமி குடும்பத்துடன் உடனே மந்திகைக்குப் புறப்பட்டான்.

மறுநாள் இராசனின் மரணச்சடங்குகள் யாவும் நடந்து முடிந்தன. கெருடாவிலிருந்தும் ஆண்களும் பெண்களுமாகப் பலர் சின்னக்குஞ்சி வீட்டுக்கு வந்து மரணச்சடங்கிற் கலந்து கொண்டனர்.

சடுதியாக நடந்து விட்ட இராசனின் மரணச்சடங்குகளுக்கான செலவுகளைச் செய்வதற்கு சின்னக்குஞ்சியால் முடியுமா? கெருடாவில் நண்பர்கள் பலர் வந்து கந்தசாமிக்குக் கைகொடுத்து உதவி இருக்காதுவிட்டால் கந்தசாமியும் அந்தச் செலவுகளைச் சமாளிப்பதற்குப் பெரும் கஷ்டப்பட்டிருப்பான்.

இராசனின் மரணச்சடங்குகள் நடந்து முடிந்த அடுத்த தினமே கந்தசாமி தன் கூலித் தொழிலுக்குப் போகப் புறப்பட்டுவிட்டான்.

அவன் குடும்பம் மந்திகையில் ஒருவார காலம் சின்னக்குஞ்சி வீட்டில் தங்கி இருந்தது. அதன் பிறகு கெருடாவிலுக்குச் செல்லப் புறப்பட்டபோது கந்தசாமி தன் மருமக்களிற் சிலரைத் தன்னோடு அழைத்துக் கொண்டு செலல விரும்பினான்.

"அக்கா, பிள்ளையளை நான் கூட்டிக் கொண்டு போகப் போறன்."

"அது வேண்டாந் தம்பி" என்று மறுத்தாள் சின்னக்குஞ்சி.

"ஏனக்கா, முந்தியும் நீ மறுத்துப் போட்டாய்!"

"இப்பவும் சொல்லுறன் அதுகள் இஞ்சினை என்னோடை இருக்கட்டும."

"நீ ஒராள் உழைச்சுத் தீன் குடுப்பியே?

"அது நான் குடுப்பன்."

"அப்ப நாங்கள் கெருடாவிலுக்குப் போகேல்லை. இஞ்சை உன்னோடை இருக்கிறம்"

"அந்தக் கதை வேண்டாம். நீ போய்க் கெருடாவிலிலை தான் இரு."

சின்னக்குஞ்சி கண்டிப்பாக மறுத்து விட்டாள் கந்தசாமி அதற்குமேல் ஒன்றும் செய்ய இயலாதவனாக மனச்சோர்வுடன் கெருடாவிலுக்குக் குடும்பத்தோடு வந்து சேர்ந்தான்.

அதன் பிறகு மூன்று வாரங்கள் கழிந்து போய் விட்டன. இன்னும்ஒருவாரகாலத்தில் பின்பு இராசனுடைய அந்தியேட்டிக்கிரியைகளைச் சம்பிரதாய பூர்வமாகச் செய்து முடிக்க வேண்டுமென்று எண்ணி இருந்தார்கள். தங்கள் இயல்புக்குத் தகுந்ததாக மிகச் சிறிய அளவில் அந்தச் சடங்குகளை முடிக்க வேண்டுமென்று கந்தசாமி தீர்மானித்திருந்தான். அதற்கான ஏற்பாடுகளை இனிமேற் கொஞ்சம் கொஞ்சமாகச் செய்து வைக்க வேண்டுமென்பதைக் கந்தசாமி மனத்தில் நினைத்துக் கொண்டு சின்னக்குஞ்சி வீட்டை நோக்கிப்புறப்பட்டான்.

கந்தசாமி அங்கு போய்ச் சேர்ந்த போது ... அவனால் தன் கண்களையே நம்பமுடியவில்லை. அந்தக் காட்சியைப் பார்த்ததும் அவன் இரத்தம் கொதித்தது; கண்கள் சிவந்து கொண்டு வந்தன.


சின்னக்குஞ்சியும் பிள்ளைகளும் கையில் ஒரு துணி மூட்டையுடன் தெருவிலே கோழியும் குஞ்சுகளும் போல குறுகிப் போய் நின்றுகொண்டிருந்தார்கள்.

அவன் அங்கே வந்திருப்பதைக் கண்டதும் சின்னக்குஞ்சி "தம்பி" என்று சொல்லிக் கொண்டு கோவென்று பெருங்குரல் எடுத்து அழத் தொடங்கினாள். அவள் குழந்தைகள் "மாமா..." என்று அழைத்துக் கொண்டு ஓடி வந்து அவனைக் கட்டிக் கொண்டு விம்மி விம்மி அழுதார்கள்.

அந்த இடத்தில் ஆண்டாண்டுகாலமாக இருந்து வந்த குடிசைகள் எல்லாம்பிரித்தெறியப்பட்டு வேலிக்கதியால்கள் வெட்டி வீழ்த்தப்பட்டிருந்தன மதங்கொண்ட யானை ஒன்று வெறியோடு புகுந்து மிதித்து உழக்கி அழித்து விட்டதுபோல அந்தக் குடிசைகள் கோரமாகக் காட்சி அளித்தன. சட்டி பானைகள் உடைந்து சிதறிக் குடிசைக்குக்குடிசை பரந்து கிடந்தன. பிய்த்தெறிந்த கூரைகளும் பழைய பாய்களும்ஆங்காங்கே குவிந்து கிடந்தன.

கந்தசாமியால் சில நிமிடங்கள். வாய் திறந்து பேசமுடியவில்லை மருமக்களை ஆதர

[6 -ம் பக்கம் பார்க்க]




## தொடர் நவீனம்

# வலியக் கொளுவி...!

கொளுவிக் கறண்ட்டெடுக்கும் கும்புலிங்கசாமி
விழுவானே உன்னுல்லன வீடே இருளுதடா
என்று சொல்லித்திட்ட இடமில்லை! இன்றைக்கு
ஒன்றும் ஒழுங்கில்லை எல்லாம் ஒரே குழப்பம்
என்று சொல்லி விட்டால் பிழையும்சரிதானே?
'மண்ணெண்ணெய் இஞ்சை மருந்துக்கும் இல்லை' என்றே
கொண்ணையுடனே கொளுவ வெளிக்கிட்டீர்!
பொன்னுத்துரை அண்ணை பொழுதுபட வந்து
கொக்கைத் தடியால் கொளுவிவிடும் பொழுது
பக்கத்து வீடுக்கும் பாய்கிறதே ஒசி ஒளி!
வெக்கத்தை விட்டே விளக்கேற்றி விட்டீர்கள்
பக்கத்து வீட்டுப் பரமர் விடுவாரா
கொக்கைத் தடியை அவருமெல்லே கொண்டோடி
அக்கை தங்கை வீட்டுக்கும் அருளினார் மின்ஒளியை!
மொக்கர்தான் நாங்கள்; மூளை இருந்திருந்தால்
வீசிக்குக் காசுகட்டி, விண்ணப்பஞ் செய்துவிட்டு
மாசக்கணக்கில் மனிசரைப்போல் காத்திருந்து
சேவிஸ்கனெக்சன் முறை வந்து சேருமட்டும்
விசிக்கு நூறு தடவை நடந்து வந்து
மீற்றருக்காய்க் காத்து விளக்கெட்டுடிப்போமா?
காற்றுக்குங்கூடக் கடமைப் படாதந்தச்
சொர்க்கத்தைச் சும்மா சுகித்திருக்கும் சூரர்கள் நீர்!
கொக்களங்கட்டிச் சிரிக்கின்ற குப்புலிங்கா
கொக்கைத் தடியாலே கொண்ணர் கொளுவுகையில்
அக் கம்பிகூட அழுத்தியதன் காரணத்தால்
அன்று லயிற் நின்று அலங்கோலப்பட்டமடா!
இன்றந்தக் கம்பி எடுக்கின்ற நேரத்தில்
கொக்கைத்தடியோடே கொண்ணர் விழுந்தெழும்ப
பக்கென்று நாங்கள் பறிகொடுத்தோம் மின்ஒளியை
வலியக் கொளுவி எமை வாட்டுகிறீர் குப்புலிங்கா!
தம்பி என்றும் அண்ணன் என்றும் தள்ளா அயல் என்றும்
அக்கை என்றும் தங்கை என்றும் அழகாய் வயர்நீள
உங்கள் அன்பின் லோட்டைக்கண்டு உருகிறதேசப்ஸ்ரேசன்
மின்னுருக்! மீண்டும் பொருத்தப்படும் வகையும்
இன்னல் படுகின்றோம் இருளில் கிடக்கின்றோம்
அனுமாரின் வால்போல நீளும் வயர்களினால்
தினமும் எம் மின்னொளியைத் திருடுகிறீர் குப்புலிங்கா
கனகர் கலியாணம் காத்தியின்ரை பொன்னுருக்கு
பொன்னற்றை பெட்டைக்குப் பூப்புநீராட்டென்று
இன்னும் கொளுவல் வயர் இப்படியே நீள்வதினால்
எட்டுமணி பட்டும் எங்கள் ரியூப் லயிற்றும்
சுட்டது போல் எல்லே சுவரில் கிடக்கிறது!
பட்டது என் பிள்ளை படிப்பும் எனது எழுத்தும்!
வடம்போலக்கட்டி வயரை இழுக்காதீர்
தடம் போட்டு மின்னை வழியில் கடத்தாதீர்
படம் பார்க்க இலலை நாம் படிக்கத்தான் கெஞ்சுறோம்.
கடலில் இருந்தோ கறண்டை நீர் அள்ளுகிறீர்!
உடையவருக்கென்றே உதவுகிற சப்பிளையில்
இடையில் வயர் கொளுவி எல்லே எடுக்கின்றீர்]
கொளுவக் கொளுவக் கறண்டும் குறையும்
வழிவழியாப் போங்கள் உந்த வயரைக் களட்டுங்கள்!
திருடனைப் பார்த்துத் திருந்துவதே தேவை ஐயா
ஓட்டுண்ணி போல் நீங்கள் மின்னை உறுஞ்சுவதைக்
கட்டுப்படுத்தக் கடவுள் போல் ஈயெஸ் ஐயா
வெட்டினார் வந்து வயரை! அவர் போக
கட்டினீர் மீண்டும்! கடவுளுக்குக் கண்ணிருக்கு
மண்ணெண்ணெய்இல்லை என்று மனிசருக்குச்சொல்லிவிட்டு
ஒன்றென்று இரண்டென்று மூன்றென்று நாலென்று
இன்றைக்குப் பத்துப் பல் பெரிகுமே சோதரனே!
குப்பி விளக்கெரித்த குப்பையா உண்ணை
சத்தியமாய்ச் சொல்லு எண்ணெய் இருக்கையிலே
பத்து விளக்கா கொளுத்தினீ வைத்திருந்தாய்
'வருகிறது சும்மா' என்று சொல்லி அம்மா!
இரவற் புடவையிலே இது நல்ல கொய்யகமா?
கொக்கைத் தடியாலே கொண்ணர் கொளுவுகையில்
பக்கத்தில் நின்று பகிடிபண்ண ஆளில்லை
பாய்ந்து பிடிக்கப பலமான ஆளில்லை!
மானம் இருந்தால் இவை ஒன்றும் தேவை இல்லை
தன்மானம் அந்தத் தமிழ்மானம் ஒன்றிருந்தால்
மின்னை இனிமேல் களவெடுக்க மாட்டீரே!

— சத்தியசீலன்

## எமது சிறுகதை

# நோட்டம்

★ மருதனுமடம்
சி. கதிர்காமநாதன்

தரகர் சின்னத்தம்பியர் கிளம்பிவிட்டார். இனி அவரைச் சந்தையில் பலாப் பழங்கள் விற்பனை செய்யும் இடத்தில் தான் காண முடியும். சதைப் பிடிப்பற்ற அவரின் உடம்பு நெடுத்து வளர்ந்திருந்தது. இது அவரின் ஒட்ட நடைக்கு எந்த விதமான எதிர்ப்பையுப் காட்டவில்லை. நெற்றியில் பூசியிருந்த திருநீற்றுப் பூச்சு அவரின் முகத்துக்கு ஒளி ஊட்டியது. காதில் செருகிய செவ்வரத்தம் பூ' அவர் செல்லும் பாதையில் மற்றவர்கள் பாதியா வண்ணம் விலகுவதற்கு அபாய அறிவிப்பு காட்டிக் கொண்டு இருந்தது. சந்தைத் தரகு மாத்திரமின்றி, வெளியிலும் தரகுத் தொழில் செய்து கொண்டிருந்த சின்னத்தம்பியர் சந்தை வாசலை நெருங்கிய போது யாரோ கூப்பிடுவது அவருக்கு கேட்டது.

"சின்னத் தம்பியண்ணை, இண்டைக்கு ஆட்டைப் பாக்க போவமே... "—அவன் உரத்த குரலில் கேட்டான்.

"ஓமடாப்பா சந்தை கலைய வாறன், வீட்டில நில்" எனச் சின்னத்தம்பியர் கூறிவிட்டுச் சந்தைக்குப் போய்விட்டார். தனது வழமையான தொழில் இடத்துக்கு வந்தபோத அங்கு பலாப்பழங்கள் அதிகம் காணப்படவில்லை. பக்கத்துத் தேநீர் கடையில் அந்தப் புலரும் பொழுதில்பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது. சின்னத் தம்பியர் தனவழக்கமான இடத்தில் அமர்ந்தார்.

"என்ன தரகர் குந்திவிட்டீர், எப்படி உம்மடபாடு?" கேட்டவரை நிமிர்ந்து பார்த்தார் சின்னத்தம்பியர்.

'தம்பி கோயில் திருவிழா எல்லாம் முடிஞ்சால் இப்படித் தான். அடுத்த சந்தைக்குக் கொண்டு வாரும்' என சின்னத் தம்பியர் அவருக்கு ஆறுதல் படுத்த, அவரும் சைக்கிளை உருட்டிக்கொண்டு வெளியே போனார்.

'ஐஞ்சு ரூபாவாவது இண்டைக்கு உழைக்கவில்லையே'

"அட தம்பையாவே? என்ன, ஒருமாதிரி போகுது இப்ப விக்க வாறவை தரகர் வித்துக் கொடுக்கிறதை விரும்புறதில்லை. அப்பிடி வெளிக்கிட்டாலும் சண்டைக்கு வந்திடுவினம்" எனச் சின்னத்தம்பியர் அலுத்துக் கொண்டார்.

"ஓம் தரகர், இப்ப உப்படித்தான். சரி, நான் அரிசி வாங்கவேணும் கொஞ்சம் வாயில் போடப் பொயிலை தாங்கோ." சின்னத்தம்பியர் புகையிலை எடுப்பதற்கு மடிப்பை அவிழ்த்தார். மடி வெறுமனே கிடந்தது.

"அட பொயிலை இல்லைப் போல கிடக்கு. நான்வாறன் தம்பையா" என்றவர், "பொயிலையுமில்லை. வரேக்க மரக்கறியும் வேண்டி வர சொன்னவை. இண்டைக்கு எப்படியும் கொஞ்ச காசாவது உழைக்க வேணும்" எனத் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டார். விலை கூட்டி விற்க முற்பட்டவர்களாலும் ஏற்பட்ட சமரசமற்ற பேச்சு வார்த்தைகளின் நிலையில் சந்தை அமளிப் பட்டுக்கொண்டிருந்தது. இவ்வேளையில் பலாப் பழங்கள் சின்னத்தம்பியரைச் சுற்றிப் பரவிக் கிடந்தன.

"தரகர் தரகர்" என யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டதும் இருந்தவர், எழுந்து விட்டார்.

"ஒரு நல்ல பழம்வேணும். வேண்டித் தாங்கோ" அழைத்தவர் சின்னத்தம்பியரைக் கேட்டார்.

"தம்பி பழங்களின்ரை உள் விஷயங்கள் பற்றி எனக்குச் சரியாகத் தெரியாது. உமக்குப் பிடிச்ச பழத்தைக் காட்டும். விலை தீர்த்துத் தாறன்" எனக் கூறிவிட்டு அங்கும் இங்கும் ஓடித்திரிய ஆரம்பித்தார்.

நேரம் சென்று கொண்டிருந்தது. விற்பனைக்கு வந்த பழங்களின் தொகையும் அதிகரித்துக் கொண்டிருந்தது. சின்னத்தம்பியருக்கு நிலைமை புரிந்து விட்டது. இப்படியே வைத்திருந்தால் எல்லோரும் வீட்டை கொண்டுபோக வேண்டியது தான் என எண்ணிக்கொண்டு விலை கேட்டும் கொடுக்காமல் அடம்பிடித்துக் கொண்டிருந்தவர்களுக்குப் புத்திமதி கூறத் தொடங்கி விட்டார்.

"தம்பியவை இலாப நட்டம் பாராமல் ஒரு மாதிரி தட்டிப் போடுங்கோ. பிறகு கவலைப்படுவியள்."

அவர்களோ அவர் பேச்சைக் காதில் போட்டுக் கொள்ள வில்லை. கொந்திய பழத்தை வாங்குவதற்காக இரண்டு பழுத்த கிழவிகள் தங்களுக்குள் சண்டை பிடித்துக் கொண்டிருந்தார்கள். நேரம் நன்கு சென்றதனால் ஒருவர் பொறுமையிழந்து பலாப் பழத்தைத் தூக்கி சைக்கிள் கரியரில் கட்டத் தொடங்கினார்.

என சின்னத்தம்பியர் கவலைப் பட்டுக் கொண்டார். கிழவர் ஒருவர் கால்கடுக்க நின்ற நோவினால் சாக்கை மடித்துக் கீழே போட்டு புறுபுறுத்துக் கொண்டு குந்தி இருந்து விட்டார்.

சந்தையில் சன நெரிசலின் அமளி குறைந்து காணப்பட்டது. முன்பு பழம் கொடுக்கத் தயக்கம் காட்டியவர்கள் அதே நிலையிலேயே நின்று கொண்டிருந்தார்கள். சின்னத்தம்பியர் அவர்களைப் பார்த்துச் சிரித்துக்கொண்டார் இந்நேரத்தில் பெரிய மனிதர் என்று சொல்லத்தக்க ஒருவர் இரண்டு கைகளையும் தனது காற்சட்டைப்பைக்குள் விட்டபடி வேகமாக அங்கு நுழைந்தார். சின்னத்தம்பியர் அவரை நோக்கி "ஐயா வாங்கோ நல்ல பழம் எடுத்துத்தாறன்" எனக் கூறிக் கொண்டு வரவேற்றார். ஆனால் அவரோ சின்னத்தம்பியரின் பேச்சைக் கவனிக்காமல் எட்ட நின்று எல்லாப் பழங்களை பார்த்து விட்டுப் பக்கத்தில் நின்ற கிழவரிடம் கேட்டார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## மனிதனும் மிருகமும்

★ வஞ்சனையாலும் சூதினாலும் சமயத்துக் கேற்பப் பல வித கபடங்கள் செய்து ஜீவிப்பவன் நரி

★ தர்மத்திலும் புகழிலும் விருப்பம் இல்லாமல் அற்ப சுகத்திலே மூழ்கிக் கிடப்பவன் பன்றி

★ சுதந்திரத்தில் இச்சையில்லாமல் பிறருக்கும் புரியாமல் நடந்து கொண்டு அவர்கள் கொடுத்ததை வாங்கி வயிறு வளர்ப்பவன் நாய்

★ பொருளை அறியாமல் முன்னோர்வளர்த்தசாஸ்திரங்களை திரும்பத் திரும்ப வாயினால் சொல்லிக் கொண்டிருப்பவன் கிளிப்பிள்ளை.

★ பிறரது அக்கிரமத்தை நிறுத்த முடியாமல் தனது மந்த குணத்தால் பொறுத்துக் கொண்டிருப்பவன் கழுதை.

★ தான் சிரமப் படாமல் பிறர் சொத்தை அபகரித்து உண்ணுபவன் கழுகு.

—சச்சி

## தொடர் நவீனம்

[5ம் பக்கத் தொடர்ச்சி]

வோடு அணைத்து வைத்துக் கொண்டிருக்கும்போதும், உழைத்து உழைத்து உரமேறிப்போன அவன் கைகால்கள் படபடத்து நடுங்கின. அவன் தன் உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்தமுடியாத நிலையில் வார்த்தைகள் தடுமாறிக் கொண்டு வெளிவந்தன.

"அக்கா, என்ன நடந்தது?"

"காணிக்காறர் வந்து வீடுகளைப் புடுங்கி எறிஞ்சு எங்களைக்கலைச்சுப் போட்டினம் அப்பு."

"நாங்கள் தானே சந்ததி சந்ததியாக இதிலை குடியிருக்கிறம்; பிறகு அவைக்கென்னவாம் காணி?"

"உதை ஆரப்பு கேக்கிறான்!"

"நாங்கள் தான் தட்டிக் கேக்கவேணும்........ இஞ்சை இருந்தவனெல்லாம் எங்கை போய்விட்டான்கள்?"

"மாயக்கைக்கும்... அல்வாய்க்கும் சொந்தக்கார வீடுகளுக்குப் போய்விட்டினம்."

"சீ... ! இவங்களெல்லாம் ஆம்பிளையளே! வேட்டி கட்டிக்கொண்டு திரியிறுங்கள்... ஆரார் வந்து புடுங்கி எறிஞ்சவங்கள் ஆக்களைச் சொல்லு, நான் இப்ப போய்......"

கந்தசாமி பொறுமையை இழந்து பல்லை நெருடினான்.

"என்ரை அப்புவெல்லே நீ போகவேண்டாம் ராசா. இதுகளை நினைச்சுத்தானப்பு நீ இஞ்சை குடியிருக்க வேண்டாமெண்டு, ஊரைவிட்டுக் கலைச்சனான். நீ உழைச்சு எங்கையெண்டாலும் ஒரு காப்பரப்புக்காணி வாங்கி அதிலை குடியிருக்கவேணுமெண்டு நினைச்சுத்தான் என்ரை குஞ்சு குருமானுகளை உன்னோடை விடாமல் மறிச்சனான். இப்ப என்ரை ராசா... ஐயோ...! ஐயோ !"

சின்னக்குஞ்சி தன் மனத்தில் அவனைப்பற்றிக் கொண்டுள்ள கவலைகள் எல்லாம் இப்போது தான் அவனுக்கு தெளிவாகப் புரிந்தன

"அக்கா..." என்று குரல் தளதளக்க வாஞ்சையோடு அழைத்த அவன் மேலும் பேச முடியாமற் கண்கலங்கினான்.

"ஐயோ ராசா, இந்த வீட்டிலை இருந்து கண்மூடின அந்த மனிசன்ரை அந்திரட்டிக்கும் இதிலை காய்ச்சிப்படைக்கேலாமற் போச்சே! அந்தச் சீவனெல்லோ அந்தரிக்கப் போகுது. எங்களுக்கு மண்ணள்ளிப்போடப்போகுது"

"இப்பிடிச் செய்தவங்களுக்கு மண்ணள்ளிப்போடட்டு மக்கா. சரி... நாங்கள் போவம் வாருங்கோ"

கந்தசாமி தன் இளைய மருமகனைத் தூக்கித் தோளின்மேற் போட்டுக்கொண்டு அங்கிருந்து திரும்பி நடந்தான்.

சின்னக்குஞ்சியும் பிள்ளைகளும் அவனைப்பின்தொடர்ந்தார்கள்.

அன்றிரவே கெருடாவிலிலுள்ள அவன் வளவுக்குள்ளே, அந்தப்பகுதி மக்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து புதிய குடிசை ஒன்றைப் போட்டு முடித்தார்கள்.

(வளரும்)

## ஜப்பானில்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகளையும் ஜப்பானிய அரசாங்கம் செய்திருக்கிறது. இதற்கான முழுச் செலவுகளையும் ஜப்பானிய அரசாங்கமே பொறுப்பேற்றிருக்கிறது. உலகின் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த 12 தலைவர்கள் இந்த அழைப்பை ஏற்றிருக்கிறார்கள்

இந்தக் கண்காட்சி ஆரம்பித்தது முதல் ஜப்பானில் போக்குவரத்து நெரிசல் மோசமடைந்திருக்கிறது.

இங்குள்ள ஹோட்டல்கள் கூட வெளிநாட்டுப் பார்வையாளர்களை வசதியாகத் தங்க வைத்துக் கொள்வதற்கு முடியாமல் திணற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறதாம். சுகூபாவில் மிகப்பெரிய ஹோட்டல்கள் யாவும் எதிர்வரும் செப்டம்பர் மாதம் வரை வெளிநாட்டுப் பார்வையாளர்கள் மூலம் 'புக்' செய்யப் பட்டுவிட்டன. அந்த அளவுக்கு இந்தக் கண்காட்சி பார்வையாளர்களைக் கவர்ந்திருக்கிறது

இருபத்தோராம் நூற்றாண்டின் தேவைகளுக்கு ஏற்றவிதமாக ஜப்பான் அதன் தொழில் நுட்ப முறைகளை வளர்த்துக் கொண்டுவிட்டது என்று உலக மக்கள் கூறும் அளவுக்கு ஜப்பான் இந்த விஞ்ஞான உலகத்தை அதி அற்புதமாகச் சிருஷ்டித்திருக்கிறது.

நீங்கள் வளரும் போதே
உங்கள் சேமிப்பு வளர்வதை
உறுதி செய்யுங்கள்

முதலீடுகளுக்கு உயர்ந்த வட்டி 30% ஷக்ரு தருகிறது

மாதாந்தம் சிறு தொகை சேமித்து
குறுகிய காலத்தில் பெருநிதி
பெற விரும்புகிறீர்களா?

"ஷக்ரு" வழிகாட்டுகிறது

'ஷக்ரு'வின் உழைக்கும்போதே
சேமிக்கும் திட்டத்தில்
இன்றே சேருங்கள்

உழைக்கும்போதே சேமிக்கும் திட்டம்

| மாதாந்தம் நீங்கள் சேமிக்கும் தொகை | 36 மாதமுடிவில் உங்களுக்குக் கிடைப்பது |
|---|---|
| ரூபா 100/= | ரூபா 4,727/60 |
| ,, 200/= | ,, 9,455/20 |
| ,, 300/= | ,, 14,182/80 |
| ,, 400/= | ,, 18,910/40 |
| ,, 500/= | ,, 23,638/00 |
| ,, 600/= | ,, 28,365/60 |
| ,, 700/= | ,, 33,093/20 |
| ,, 800/= | ,, 37,820/80 |
| ,, 900/= | ,, 42,548/40 |
| ,, 1000/= | ,, 47,276/00 |

உங்கள் சேமிப்புக்கு உயர்ந்த தொடர் வட்டி வழங்கப்படுகிறது

நிறுவனத்தின் நிதி நிலைமை

| நிதியாண்டு | 1981/1982 | 1982/1983 | 1983/1984 |
|---|---|---|---|
| முதலீடு | ரூ. 178,700/= | ரூ. 500,000/- | ரூ. 1000,000/- |
| ஒதுக்கீடு | —— | 31,510/- | 321,810/- |
| வைப்பு முதல் | 1280,760/- | 4236,969/- | 123,98,671/- |
| கடன் பெறு முதல் | —— | —— | —— |
| வைப்பாளர்களுக்கு வட்டி வழங்குமுன் இலாபம் | 191,019/- | 574,960/- | 24,77,997/- |
| வைப்பாளர்களுக்கு வழங்கிய வட்டி | 142,977/47 | 492,217/12 | 21,82,765/- |
| தேறிய லாபம் | 48,041/74 | 82,743/53 | 261,926/- |

31-03-85இல் மொத்த வைப்பு 300 இலட்சத்திற்கு மேல்

இயக்குநர்கள்:- எல். பாலசுப்பிரமணியம் [F I B Lond] கே. சண்முகம், [illegible]

நிதித்துறையில் நாணயம் மிக்க நண்பன்

ஷக்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிடெட்

207, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22073.
61, நியூபுல்லர்ஸ் வீதி, கொழும்பு - 4. தொலைபேசி: 589310.

## மொடேர்ண் மினி சினிமா

[ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமை]

**Emmanuel 3**

கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்.

---

## வின்ஸர்

தினசரி 10-30, 2-00, 4-15

Jerome, Susan in SURVIVAL RUN

---

## லதா மினி

(கோண்டாவில்)

10-30, 3-30,

சிவாஜி - பிரபு K.R. விஜயா

**வம்சவிளக்கு**

---

## நியூசாந்தி (மினி)

யாழ். சாந்தி சினிமாவில்

வை. ஜி. மகேந்திரனின்

**உருவங்கள் மாறலாம்**

---

## சிவன் மினி சினிமா

K. K. S. ரோட் சிவன் கோயிலடி சந்திக்கு முன்பாக

5 6-85 முதல்

10-30 2 30, 4-30

A V PAIR GIRL

கண்டிப்பாக 18 வயதுக்குட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். 4 அடித் திரையில் காண்பிக்கப்படுகிறது.

---

## ஹரன் மினி

தனசரி 10-30, 2 30

சிவாஜி, — பிரபு, கே. ஆர் விஜயா

**மிருதங்கசக்கரவர்த்தி**

வெண்திரையில்

வை தி (கலர்)

---

## ராஜா தியேட்டர்

யாழ்ப்பாணம்

தினசரி 10-30, 2 30

கமலஹாசன்-ஜெயப்பிரதா

**சலங்கை ஒலி**

கடைசிவாரம்

---

## ஆனந்தி வீடியோ சினிமா

(மனோகராவில்)

தினசரி 10-30, 2-30

எம்.ஜி.ஆர்.-சரோஜாதேவி நடித்த

**ஆசைமுகம்**

---

## லிடோ சினிமா

சுதாகர் - ராதிகா நடித்த

**ஆயிரம வாசல் இதயம்**

(ஈஸ்மன்கலர் புதியகொப்பி)

---

## வெலிங்டன்

(யாழ். நகர்)

10-30, 2 30

பாக்கியராஜ் - சரிதா நடித்த

**மௌன கீதங்கள்**

(ஈஸ்மன் கலர்)

---

## மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

### அறிவித்தல்

கீழ்க்காணும் தளபாடங்களைச் செய்து விநியோகிப்பதற்கான கூறுவிலைகள் மரத் தளபாடங்களைச் செய்வோரிடமிருந்து கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | மகப்பேற்றுக் கட்டில்கள் | —08 |
| 2. | மேசைகள் | —08 |
| 3. | கதிரைகள் | —08 |
| 4. | லொக்கேர்ஸ் | —06 |
| 5. | வாங்குகள் | —10 |
| 6. | கபேட்டுகள் | —02 |

கூறுவிலைகள் அரக்கு முத்திரையிடப்பட்டு 14-06-85ம் திகதிக்கு முன் எமக்குக்கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேலும் விபரங்களை அறிய அலுவலகத்துடன் தொடர்பு கொள்க.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

05-06-1985. (3687)

---

## சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது), சுன்னாகம்

### அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் 2000ற்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகளும், கழிவு சீனியும் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச்சாக்குகளுக்கு ரூபா 250/-உம் ஏனையவற்றிற்குரூபா 50/-உம்மீளளிப்புவைப்புப்பணமாகச் சங்கத்தில் செலுத்திச் சங்க வேலை நாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்

13-6-1985 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்

பொது முகாமையாளர்.
சுன்னாகம் பல நோ. கூ. சங்கம், சுன்னாகம்.

3-6-1985 3700

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### பரீட்சைகள் அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட/விஞ்ஞானபீடங்களுக்கான ஆண்டு இறுதிப் பரீட்சைகள் 1985 ஆகஸ்ட் / செப்டம்பர் மாதங்களில்நடைபெறவுள்ளன. தகுதி வாய்ந்த மீளப் பரீட்சார்த்திகள் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று 30-6-1985க்கு முன்னர் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் (தேர்வுகளுக்கு) அனுப்பிவைக்கவும்.

பதிவாளர்.
3688

---

## VACANCY

Secretary - Uduvil Y. M. C. A.

Applications are invited for the above temporary post. Minimum academic qualification G. C E (O L) with good knowledge of English Past experience in Technical Project Supervision, ability to independently manage correspondence and office management would be added qualifications. Salary negotiable.

Apply: Mr. Prince Ratnam,
Secretary, Uduvil Y. M C. A.,
Love lane, Uduvil, Chunnakam
on or before the 30th of June, 1985.

3697

---

# வெளிநாடு பிரயாணம்

அமெரிக்கா, கனடா, ஒல்லாந்து செல்வதற்கான
சகல ஒழுங்குகளும்,
பிரான்ஸ், ஜேர்மனி செல்வதற்கான
சிறந்த வசதிகளும்,
குறைந்த செலவில் காலதாமதமின்றி
செய்து கொடுக்கப்படும்.

வியாழன் — ஞாயிறு வரை

PRASAD REST,
11-Ubatissa Road,
BAMBALAPITIYA PHONE 587855

வ.நல்லையா
அளவெட்டி.வடக்கு,
அளவெட்டி

[3694]

---

# எவர்சில்வர்ப் பாத்திரங்கள்!

யாழ். நகரில் எல்லாவிதமான "சங்குமார்க்" எவர்சில்வர்ப் பாத்திரங்களை மொத்தமாகவும், சில்லறையாகவும், மிகக் குறைந்த விலையில் தெரிவுசெய்ய தலைசிறந்த ஒரே ஸ்தாபனம்

# செல்லாசன்ஸ்

**சேல்ஸ் சென்ரர்,**
**118, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

"வியாபாரிகளுக்கு அதிவிஷேட கழிவுண்டு"

---

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சிவநாதன்

உடுவில் கிழக்கைச் சேர்ந்த ஆறுமுகம் சிவநாதன் (ஓய்வுபெற்ற யாழ்ப்பாணம்-கொழும்பு மாநகரசபை உத்தியோகத்தர்) 06-06-85 வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார். இவர் திரு சி. ஆறுமுகம் (ஓய்வுபெற்ற O A), திருமதி சின்னம்மா ஆறுமுகம் ஆகியோரின் அன்பு சிரேஷ்ட புத்திரனும், திரு பத்மநாதன் (ஓய்வுபெற்ற குடிவரவு குடியகல்வுத்திணைக்கள உத்தியோகத்தர்), மங்களேஸ்வரி கமலநாதன் (ஆனைக்கோட்டை R. C பாடசாலை), காலஞ்சென்ற யோகநாதன், விஜயநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பற்குணராசா (மஸ்கன்ஸ் ஈவினை) புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், முருகானந்தன், டங்சஜவதனி ஆகியோரின் அன்பு மாமனருமாவார். அன்னாரின் ஈமச்சடங்குகள் 06-06-85ல் உடுவிலில் நடைபெற்றன. உற்றாரும், உறவினரும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ஆ. கமலநாதன்,
மங்கள வில்லா, உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

3691

---

## உருத்திரபுரம் சிவாலயம்

வரலாற்றுப்புகழ் மிக்க உருத்திரபுரம் சிவாலயம் பற்றிய கட்டுரை 16-6-85 வாரமலரில் எதிர்பாருங்கள்

ச. அம்பிகைபாகன்
எழுத்தாளர்

---

## S T. L. மினிசினிமா

(திருநெல்வேலி)

காட்சி: 10-30, பி.ப.2-15, 4 30

**Emmanuel 111**

ஆரம்பமுதல் இறுதிவரை ஒரே குழுமை முற்றிலும் பாலியல் காட்சிகள் நிறைந்த படம் கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

---

## ஸ்ரான்லி மினி

(சினிமா)

5'X5' திரையில்

10-30, 2-15, 4-15

**DIVINE EMMANUEL**

கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

---

## கல்வித் திணைக்களம் - கிளிநொச்சி

### பாடசாலைக் கட்டிட நிர்மாண வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சிக் கல்வித் திணைக்களப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளராகிய என்னால் கிளிநொச்சி கல்வி மாவட்டத்தில் கீழ்க்காணும் நிர்மாண வேலைகளுக்கான கேள்விகள் 1985-06-27ந் திகதி மு. ப. 9.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| | பாடசாலைப் பெயர் | வேலையின் தன்மை | கோரப்படும் பதிவுத்தொகை |
|---|---|---|---|
| 1. | பளை ம. வி | பெரிய திருத்த வேலைகள் | 100.000/- |
| 2. | இராமநாதபுரம் ம. வி. | ,, | 100.000/- |
| 3. | கிளிநொச்சி ம. வி | ,, | 100.000/- |
| 4. | பல்லவராயன்கட்டு அ. த. க. பா. | கிணறு | 100,000/- |
| 5. | அக்கராயன் அ த. க. பா, | கிணறு | 100,000/- |
| 6. | கனகபுரம் அ. த. க. பா. | சலகூடம் | 100,000/- |
| 7. | கலவெட்டித்திடல் நாகேஸ்வரி வி. | ,, | 100,000/- |
| 8. | பரந்தன் இந்து த. க. பா. | மலசலகூடம் | 100,000/- |
| 9. | சிவநகர் அ த. க பா, | , | 100 000-/ |
| 10. | பன்னங்கண்டி அ த. க. பா. | ,, | 100,000/- |
| 11. | ஆனையிறவு அ. த. க. பா. | ,, | 100,000/- |
| 12. | அக்கராயன் அ த. க. பா | ,, | 100,000/- |

ஒப்பந்த வேலைக்கான பதிவை உறுதிப்படுத்தும் ஒப்பந்தகாரருக்கு 1985 06-17-ந் திகதி மாலை 3-00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் ஒவ்வொரு வேலைக்கும் கிளிநொச்சிப் பிராந்தியக் கல்விப்பணிப்பாளரின் பேரில் கிளிநொச்சிக் கச்சேரியில் ரூபா 125/-ஐ வைப்புப்பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் அரக்குமுத்திரை இடப்பட்ட உறையில் அனுப்பப்படுவதோடு ஒவ்வொரு வேலைக்கும் புறம்பான உறை உபயோகிக்கப்படவேண்டும். உறையின் இடதுபக்க மேல்மூலையில் வேலையின் விபரத்தையும், பாடசாலையின் பெயரையும் குறிப்பிடவும். கேள்விப்பத்திரங்கள் 27-06-1985 காலை 10-30 மணிக்கு திறக்கப்படும். ஏனைய விபரங்களை இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். எம். மன்சூர்
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

கல்வித் திணைக்களம்,
கிளிநொச்சி, 1985-06-07 (3690)

# பூஸா முகாம் இளைஞர்க்கு புனர்வாழ்வு!

## திட்டம் விரைவில் அமுலாகும்

(கொழும்பு)

பூஸாமுகாமிலிருக்கும் தமிழ் இளைஞர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்படும். இதற்கான திட்டம் ஒன்று விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டம் சிறுவர் நன் நடத்தைப்பிரிவு மூலம் மேற் கொள்ளப்படவிருக்கிறதாம்.

இப் புனர்வாழ்வுத் திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான ஆலோசனைகளை மேற்படி பிரிவு அரசாங்கத்திடமிருந்து எதிர் பார்த்திருக்கிறது. அதேவேளை பூஸா முகாமிலிருக்கும் இளை ஞர்களுடைய மனோநிலை, சுகா தார நிலை போன்றவைகள் விசேஷமாகப் பரீட்சிக்கப் பட்டு இவர்கள் தீவிரவாத இயக்கங்களில் சேர்வதற்கு மனோநிலை காரணமாக இருந் ததா என்பது குறித்து முக்கிய மாக ஆராயப்படவுள்ளது. அதற்காகப் பல்கலைக்கழக மனோவைத்திய நிபுணர்களின் சேவை விசேஷமாகப் பெறப் படவுள்ளது. (மா)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கல்வயல் அருள் மிகு வேதவனப் பிள்ளையார் தேவஸ்தான மணிக்கோபுர வைரவப் பெருமான் ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று நடைபெறும்.

வைத்தியக் கலாநிதி வே சிவசுப்பிரமணியம் குடும்பத்தி னர் பொறியியலாளர் வே சிவ பாதசுந்தரம் குடும்பத்தினர் வழங்கிய புதிய மணியும் பிரதிஷ்டை செய்து வைக்கப் படும்.

## புலிகள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

குழுவின் தலைவர் குளி யாப்பிட்டி வாசியென்றும் இவர்கள் தமிழிலும் ஆங்கிலத் திலும் சரளமாகப் பேசினார் கள் என்றும் தெரிவிக்கப்பட் டது. [து]

## ஆறு வாரங்களில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உச்சிமாநாட்டில் இந்திய மாநில ஆட்சி அமைப்பு முறையை இலங்கையில் அமுல் படுத்துமாறு இந்திய தரப்பில் வலியுறுத்தப்பட்டதாகத் தெரி கிறது.

உச்சிமாநாட்டுக்குப் பின்னர் கெய்ரோ சென்றிருந்த இந்தி யப் பிரதமர், அங்கு நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றுகையில், இலங்கை ஜனாதிபதி தமக்கு அளித்த உறுதிமொழியிலிருந்து தவறமாட்டார் எனத்தாம் நம் புவதாகத் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (மா)

## நெடுங்கேணியில்

[முல்லைத்தீவு]

நெடுங்கேணியில் வைத்து கடந்த மாதம் 21ம்- தேதி கடத்தப்பட்ட முல்லைத்தீவு செ. அமிர்தசித்த ஐயாவின் வாகனம் இன்னும் திருப்பி ஒப் படைக்கப்படவில்லை.

இந்த வாகனம் இரு மாதங் களுக்கு முன்னர்தான் ஒரு பினன்ஸ் கம்பனியால்கொண்டு செல்லப்பட்டதாகவும், பின் னர் கடன்பட்டு, நகைகளை அடைவுவைத்து உரிமையாளர் மீட்டு வந்ததாகவும் கூறப்படு கிறது.

இவ்வாறு மீட்டுவந்த வாகனத்தை இனந் தெரியாதவர்கள் கடத்திச் சென்றுவிட்டதாக கூறப்படுகி றது இந்த வாகனத்தை நம் பியே குடும்பம் நடத்திவருவ தால் வாகனத்தை திருப்பித் தருமாறு உரிமையாளர் வேண் டுகோள் விடுத்துள்ளார்.

## மினி வான் கடத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டையிலுள்ள வீடொன்றிலிருந்து மினிவான் ஒன்று நேற்றுப் பகல் இனந் தெரியாத நபர்களால் கடத் திச் செல்லப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட வான் கச்சே ரிக்கும் யாழ் நகருக்குமிடையே போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வந்தது. [மா]

## கடத்தப்பட்ட வான் கிடைத்தது

[வண்ணார்பண்ணை]

இளைஞர் கோஷ்டி ஒன்றினால் கொழும்புத்துறை வீதியில் வைத்துக் கடத்திச்செல்லப் பட்ட பாடசாலை சேவையில் ஈடுபடும் வான் ஒன்று மறு நாள் காலை பாடசாலைச் சேவைக்கு பயன்படத்தக்க வகையில் திருப்பி ஒப்படைக் கப்பட்டுள்ளது. வியாழக் கிழமை பகல் கடத்தப்பட்ட இந்த வான் வெள்ளிக்கிழமை அதிகாலை திருப்பி ஒப்படைக் கப்பட்டது.

## 85 பிரயாணி-

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இரு பஸ்களிலும் பிரயாணம் செய்தனர். பிரயாணிகள் ஒவ் வொருவரும் நுணுக்கமாகச் சோதிக்கப்பட்டுக் கொள்ளை யடிக்கப்பட்ட பின் தாக்கப் பட்டனராம். ஒருவரின் உள் ளங்கி சிழிக்கப்பட்டு அதிலி ருந்த 10 000 ரூபா கொள்ளை யடிக்கப்பட்டதாம் பெண்கள் மானபங்கத்திற்குள்ளானார் கள்.

இவற்றின் பின்னர் பிரயா ணிகள் அந்த இரு பஸ்களிலும் ஏற்றப்பட்டு தீயிடமுயன்ற சந் தர்ப்பத்தில் தெய்வாதீனமாக அங்கு வந்த கொக்கலெல்லப் பொலிஸாரினால் காப்பாற் றப்பட்டனர். பொலிஸாரைக் கண்டதும் கும்பல் கலைந்து ஓடிவிட்டதாம்.

குறித்த இரு பஸ்களையும் பிரயாணிகளையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்ற பொலிஸார் வாக்கு மூலங்களை பதிவு செய்து கொண்டு பிர யாணிகளை பஸ்களில் கொழும் புக்குத் திருப்பி அனுப்பி வைத் தனர்.

இந்த பஸ்களில் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வந்த வர்களுமிருந்தனர்.

## பரந்தன் ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

### திராவிட நாகரிகம்

பழமை வாய்ந்த திராவிட நாகரிகத்தின் மெய்மையை நிரூபிக்கும் சான்றாக, முது மக்கள் தாழிகள் விளங்குகின் றன. தென்னிந்தியாவில் ஆதிச்சநல்லூரில் இத்தகைய முதுமக்கள் தாழிகள் கண் டறியப்பட்டு, சென்னை தொல் பொருள் களஞ்சியத்தில் வைக் கப்பட்டுள்ளன. இத்தாழிகளை அங்கு நான் பார்த்திருந்த மையால், குஞ்சுப் பரந்தனில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கும் தாழியும்அத்தகையஒன்று என் பதில் ஐயமில்லை. ஓரிரு ஆண்டுகளு க்கு முன், யாழ்ப்பாணப ஆனைக்கோட்டையிலும் இத் தகைய ஒரு முதுமக்கள் தாழி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வரலாற்று அறிஞர்களால் கண்டறியப்பட்டது குறிப்பி டத்தக்கது.

### குஞ்சுப்பரந்தன் தாழி

இன்று கண்டுபிடிக்கப் பட்டி ருக்கும் குஞ்சுப்பரந்தன் தாழி, வன்னி நாட்டின் வர லாற்றில் புதியதொரு திருப பத்தை ஏற்படுத்தி யுள்ளது வன்னி நாட்டில் முதன் முதல் கண்டறியப்பட்ட தாழி இதுவே. திராவிட நாகரிகம் இங்கெல்லாம் பரவி நிலை கொண்டிருந்தது என்ப தற்கு முறையான ஆதாரம் நமக்குக் கிடைத்துள்ளது. குஞ்சுப்பரந்தன்தாழி காணப் படும் இடத்தில் இன்னும் பல தாழிகள் காணப்படலாம்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு சண்முகராசா அவர்கள் இதுபற்றிக் குறிப்பிடுகையில் "நமது மூதாதையரின் புதை குழி ஒன்றினைக் கண்டுபிடித் துள்ளோம். அவ்விடத்தைச் சரிவரப் பாதுகாப்பதுடன் நமது மூதாதையர்களைக் கனம் பண்ணும் முயற்சிகளிலும் ஈடு படவேண்டும்'' என்றார்.

"குஞ்சுப்பரந்தன் தாழி'' குறித்து சரியான, முறையான ஆய்வினை வரலாற்று அறிஞர் கள் மேற்கொள்ள வேண்டும்.

## எமது சிறுகதை

(6ம் பக்கத் தொடர்ச்சி)

''அப்பு, பலாப்பழம் என்ன விலை?''

''இருபது ரூபாய்''

'என்ன, இருபது ரூபாயோ? இந்தச் சின்னப் பழத்திற்கோ? அப்ப பலாப் பழம் சரியான விலை போல கிடக்கு'' எனக் கூறிவிட்டு அப்பால் நகர்ந்து மற்றவர்களிடம் விலை கேட் டார் வந்தவர்.

இருபது ரூபாய் சொன்ன கிழவர் அவர்கையைப் பிடித் துக் கொண்டார்.

''ஐயா இரண்டுரூபா குறை ச்சுக் கொடுங்கோ நல்லபழம்'

''இல்லை அப்பு, வேண் டாம். கீழே வையுங்கோ'' என்று கூறிக்கொண்டு கிழவ ரின் கையை உதறிவிட்டு வெளியே ஓடிச் சென்றுவிட் டார். அந்தக் காற்சட்டைக் காரர்.

''அட, மனுசன் பழத்தை வேண்டியிருக்கும்; அதுக்கி டையில ஓடிப் போட்டுது'' எனச் சினத்தம்பியர் கூறி முடிப்பதற்குள் ஓடிப்போன அந்தப் பெரியமனிதர் கையில் ஒரு பெரிய பலாப்பழத்து டன் வந்து சேர்ந்தார்

சின்னத்தம்பியர் திகைத் துப் போனார்.

''என்ன ஐயா, பலாப்பழம் வேண்ட வந்து விலை கேட்டுப் போட்டு ஓடிப்போனீங்க. இப்ப பலாப்பழத்தோட வந்து நிற் கிறியள், எங்கவேண்டினீங்கள் என்ன விலை ஐயா?'' சின்னத் தம்பியர் ஆவலோடுகேட்டார்.

''இல்லை அப்பு நான் பலாப் பழம் வாங்க வரவில்லை எனக் குச் சாமான் விற்று பழக்க மில்லை. அதுதான் என்ரை பழம் என்ன விலைக்குப் பே கு மெண்டு விலை நோக்கம் பாக்க வந்தனான் ''

சின்னத்தம்பியரைப் பார்த் துக் கூறிக்கொண்டு தான் கொண்டுவந்த பலாப்பழத்தை விற்பதற்காக கீழே வைத்தார் அந்தப் பெரிய மனிதர்!

அதிர்ச்சி, சின்னத்தம்பிய ருக்குச் சிரிப்பாக மாறியது

(யாவும் கற்பனை)

# இவ்வாரம் உங்கள் பலன்

வாரபலன்: மாதம்- வைகாசி- 27-(1985-06-09)

ஞாயிறு-திதி-ஸப்தமி பின் இரவு வரை

நக்ஷத்திரம் - சதயம் முழுநாளும்

### மேடம்

சகோதரவழியால் சஞ்சலத் திற்கு இடமுண்டு, இனபந் துக்களின் தொல்லைகள் அதிக ரிக்கலாம். வெளியிடத்துச் செய்திகளும் வேதனையைத் தரலாம் குடும்பத்திலும் சச்ச ரவுகளுக்கு இடமுண்டு, அமைதி நன்று.

### இடபம்

உறவினர்கள் உற்சாகமான வரவேற்பைக் கொடுப்பார் கள், கல்வித்துறையில் அதிக ஈடுபாடு ஏற்படும். இலக்கிய வட்டத்தில் சஞ்சரிப்பவர்க ளுக்கு இனிமையான வாரம். தாய்வழிச் சுகக் குறைவும் உண்டு.

### மிதுனம்

கொள்கையில் அதிக பற் றுதல் ஏற்படும், இலட்சிய நோக்குடன் காரியமாற்று வீர்கள், இன சனக் கொண் டாட்டங்களுக்கு இடமுண்டு, பிள்ளைகளின செல்வாக்கு வள ரும். கற்றதால்பயன் கைமேல் கிடைக்கும், தொழில் புரியும் இடத்தில்செல்வாக்குப் பெரு கும்.

### கடகம்

தூரதேசவாசம் உங்களை துயரத்தில் ஆழ்த்தும், எதிர் பாராத விபத்தும் ஏற்பட லாம், ஆயுதங்களுடன் பழகு பவர்களுக்கு அவதானம்வேண் டும். அகால போசனத்தைத் தவிர்க்கவும்

### சிங்கம்

இரக்கசிந்தை மேலிடும், வீட்டிலுள்ளவர்களின் அன்பு தாராளமாகக் கிடைக்கும், புதுமணத் தம்பதிகளுக்கு அதிர்ஷ்ட லாபங்களும் கிடைக் பதற்கு இடமுண்டு, நீண்ட நாள் எதிர்பார்த்த நல்ல திருப்பம் ஏற்பட முடியும்.

### கன்னி

குடும்பத்தில் குறைகேட்க நேரிடும், மறைமுகமாக நடத் திய காரியம் ஒன்று அம்பல மாகலாம், எண்ணியதில் தடைகள் தோன்றும், நண்பர் களும் காலைவாரிவிடக்கூடும், மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு இலக்காவீர்கள்.

### துலாம்

மௌனம் நன்று, துன்பத் தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும், சிறிய தலையிடிக் கும் இடமுண்டு, கடமையாற் றுமிடத்தில் சகவூழியர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

### விருச்சிகம்

தொழிற்பகுதியில் உரிய வாய்ப்புகள் கிடைக்கலாம், வியாபாரத் துறையில் விருத்தி யுண்டு, செய்தொழில் சிறப் படையும், வாழ்க்கையில் சுமுகமானநிலை தென்படும்,

### தனுசு

பொருள் வரவு, உபசாரம், பொழுது போக்கு இவைகளு டன் உற்சாகமூட்டும் செய்தி யும் கிடைக்கும். இனத்தவ ரின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் நீண்ட பிரயா ணம் குறித்துத் திட்டமிடப் படலாம்.

### மகரம்

துன்பத்தின் ரேகைகள் பட ரும், எதிலும் தயக்கம் ஏற் படும், ஆதரவு கொடுத்த வரே முடிவில் கைவிரிக்கலாம் கடன் தொல்லை அதிகரிக்க லாம்.

### கும்பம்

முன்னேற்றம் தடைப்படும், குறுக்கு வழித் தலையீடு குழப் பத்தை ஏற்படுத்தலாம், ஏதேச்சாதிகாரப் போக்கில் சிலரை பகைத்துக்கொள்ள வும் நேரிடும், வீண்சந்தேகங் களைத் தவிர்க்கவும், சிந்தித் துச் செயலாற்றவும்.

### மீனம்

பிறருக்கு உதவுவதால் பணம் செலவாகும் அர சியல் வாதிகளுக்கு வரவேற் கத்தக்க வாரமாகும். பெரிய, இடத்துச் சிநேகம் ஏற்பட லாம் குடும்பத்திலும் மகிழ்ச் சிக்கு இடமுண்டு எதிர்பா ராத வரவும் உண்டு.

திருமலை
க.வே.ரவீந்திரன்

## கிளிநொச்சியில் வான் கடத்தல்

[கொழும்பு

அகதிகளுக்கு உணவு கொண்டு சென்ற வாகனம் ஒன்று இனந்தெரியாதவர்க ளால் கடத்திச் செல்லப்பட்ட தாம். கிளிநொச்சிப்பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள் ளது இந்த வாகனத்தில் மத குரு ஒருவரும் பிரயாணம்செய் துள்ளார். வாகனத்தைநிறுத்தி அதிலிருந்தவர்களைப் பய முறுத்திவிட்டு உணவுப் பொருட்களையும் எடுத்துச் சென்றனராம்.

## ஆயுதக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்பட்டுள்ளது.

இக்குழு சர்வதேச ஆயுதச் சந்தையில் தமிழ்த் தீவிரவாதி களுக்குத் தேவையான ஆயுதங் கள், வெடிமருந்துகள், நவீன யுத்த உபகரணங்களைக்கொள் வனவுசெய்து கொடுப்பதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இலங்கைத் தூதரகத்தின் முன்னாள் ராஜதந்திரி ஒருவ ரின் மகன் இந்த ஆயுதக் கொள்வனவுக்கு ஏஜண்டாக இருந்து இயங்கி வந்துள்ளதா கவும் இவர் தற்பொழுது கன டாவில் வசிப்பதாகவும் விசா ரணையிலிருந்து தெரியவந்துள் ளதாம். (து)

## மரண அறிவித்தல்

### சண்முகம் இராசையா

காரை நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட பண்டத் தரிப்பைச் சேர்ந்த இளைப்பாறிய தபாலதிபர் சண்முகம் இராசையா வெள்ளிக்கிழமை (7-6-85) அன்று கால மானார். இவர் ஜீவமலரின் (ஆசிரியை. பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி) அன்புக்கணவரும், அன்ரன் தயா சீலனின் (மாணவன், வட்டுக்கோட்டை தொழில் நுட் பக்கல்லூரி) அருமைத் தந்தையும், காலஞ்சென்ற திருமதி நல்லம்மா குணநாயகம் (இளைப்பாறிய ஆசி ரியை), திருமதி ஞானம்மா கந்தையா ஆகியோரின் அன்புத்தம்பியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (9-6-85) ஞாயிற்றுக்கிழமை காலை 10-00மணிக்கு பண்டத்தரிப்பு அம்மன் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடை பெறும்.

தகவல்: மனைவி, மகன்.

அம்மன் வீதி, பண்டத்தரிப்பு. 3712

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு ஜூன் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81 Eelanadu PO. Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126